REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2023 ஜூன் 27 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 91 இல. 150 | Tuesday 27, June, 2023 | 12 பக்கங்கள் | 50/-







## 60 வகையான மருந்துகளின் விலைகள் நேற்று முதல் குறைப்பு

### சுகாதார அமைச்சினால் விசேட வர்த்தமானி வெளியானது



60 வகையான மருந்துகளின் விலைகள் நேற்று (26) முதல் 16% குறைக்கப்பட் டுள்ளது. இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவினால் வெளியிடப்பட் டுள்ளது. புதிய விலை திருத்தத்தின் பிரகாரம் 16% விலை குறைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் டொலரின் பெறுமதி வீழ்ச்சி காரணமாக இறக்குமதி செய்யப்படும் மருந்துகளின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக தெரி விக்கப்படுகின்றது.

04

### டெங்கை ஒழிக்க அனைவரது ஒத்துழைப்பு அவசியம்;

## எதிர்வரும் மழைகாலத்துடன் டெங்கின் பாதிப்பு உயரும்

### Dr. ஆனந்த விஜேவிக்ரம மக்களுக்கு எச்சரிக்கை



பதிவாகியுள்ள டெங்கு நோயாளர்களில் 75 வீதமானவர்கள் 15 வயதுக்கு மேற்பட்டவர்கள் என சுட்டிக்காட்டிய சிரேஷ்ட ஆலோசகரும் வைத்தியருமான ஆனந்த விஜேவிக்ரம, எதிர்வரும் மழைக்காலத்துடன் டெங்கு நோயாளர்கள் மேலும் அதிகரிக்கும் அபாயம் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். ஜனாதிபதியின் ஊடகப்பிரிவினால் அண்மையில் வெளியிடப்பட்ட 101 கதை நிகழ்ச்சி

04

### பொருளாதார ஸ்திரத்திற்கு அரசு போராட்டம்;

## இலங்கை நெருக்கடியின்போது இந்தியாவின் ஆதரவு அளப்பரியது

### இந்திய விஜயத்தின்போது நீதியமைச்சர் விஜயதாச



பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியின் போது இலங்கைக்கு உதவிய பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான இந்திய அரசாங்கத்தை பாராட்டுவதாக அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அனைத்து சமூகங்களினதும் ஒருமித்த கருத்துடன் நீண்ட கால சமாதானத்தை நாட்டில் ஏற்படுத்துவதற்காக அரசாங்கம் விரைவில் உண்மை மற்றும்

04

# இலங்கை - தாய்லாந்து சுதந்திர வர்த்தக ஒப்பந்த பேச்சு வெற்றி

* 06ஆவது சுற்றுப்பேச்சு ஆகஸ்ட் 21 தாய்லாந்தில்
* அடுத்த வருடத்தில் உடன்படிக்கை கைச்சாத்து

**ஆசிய நாடுகளுக்கு இடையில் பொருளாதார உறவுகளை வலுப்படுத்தும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தொலைநோக்கு பார்வைக்கு அமைவாக பேச்சு வார்த்தைகள் ஆரம்பம்**



லோரன்ஸ் செல்வநாயகம்

இலங்கை தாய்லாந்துக்கிடையில் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தை வெற்றிகரமாக இடம்பெற்று வருவதுடன் அதன் ஐந்தாம் சுற்றுப் பேச்சுவார்த்தை நேற்று கொழும்பில் ஆரம்பமானது.

ஆசிய நாடுகளுக்கிடையில் பொருளாதார உறவுகளை வலுப்படுத்தும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தொலைநோக்கு பார்வைக்கு அமைவாக இலங்கை தாய்லாந்துக்கிடையிலான வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தைகள் இடம்பெறுகின்றன.

04



### கதிர்காமக் கந்தனின் கல்யாண ஊர்வலம்

கதிர்காமக் கந்தன் ஆலயத்தின் கந்தன் வள்ளி திருமண வீதி உலா வேடுவர்களின் தலைமையில் நடைபெற்றது. இத்திருமண ஊர்வலம் அரண்மனையில் இருந்து புறப்பட்டு வள்ளியம்மை ஆலயத்தை வந்தடைந்தது.

## ஒரே சீனா கொள்கையை இலங்கை ஆதரிக்கின்றது

### சீன வெளிவிவகார அமைச்சரிடம் அலிசப்ரி தெரிவிப்பு



ஒரே சீனா கொள்கைக்கு இலங்கை உறுதியாக ஆதரவளிப்பதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். பீஜிங்கில் சீன வெளிவிவகார அமைச்சர் குயின் கேங் உடனான சந்திப்பின் போது வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி இந்த வலியுறுத்தலை விடுத்துள்ளார்.

04

## லிற்றோ எரிவாயுவின் விலை ஜூலை முதல் குறைகிறது

### தலைவர் முதித்த பீரிஸ் அறிவிப்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

சமையல் எரிவாயுவின் விலைகளை மேலும் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என லிற்றோ கேஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அந்த நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் ஜூலை

04

### கடந்த ஐந்து மாதங்களில் மட்டும்

## CPC நிறுவனத்துக்கு ரூ.60,000 மில். இலாபம்

### முகாமைத்துவ பணிப்பாளர் தகவல்



கடந்த ஐந்து மாதங்களில் மாத்திரம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறுபது மில்லியன் ரூபா இலாபத்தை ஈட்டியுள்ளதாக கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன தெரிவித்துள்ளார். இதன் மூலம் கிடைக்கும் இலாபத்தை எதிர்காலத்தில் மக்களுக்கு வழங்கும்

04

### லிஃப்ட் உடைந்து விழுந்து

## முன்னாள் அமைச்சர் Dr. சிறில் உயிரிழப்பு



இலங்கையின் முன்னாள் சுகாதார அமைச்சர்களில் ஒருவரான டொக்டர் பி.எம்.ஜி.பி சிறில் (வயது 89) மின்தூக்கி (லிஃப்ட்) உடைந்து விழுந்த விபத்தொன்றில் சிக்கி படுகாயமடைந்து உயிரிழந்துள்ளார்.

04

### வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையை

## டிஜிட்டல் மயப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பம்

**சிங்கள ராவய அமைப்பினருக்கு அமைச்சர் மனுஷ நாணயக்கார பதில்**



லோரன்ஸ் செல்வநாயகம்

வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையை டிஜிட்டல் மயப்படுத்துமாறு சிங்கள

04

## ஜூன் மாத முதல் 20 நாட்களில் 61,183 சுற்றுலா பயணிகள் வருகை

### இந்தியா, ரஷ்யாவிலிருந்தே அதிகமானோர் வந்துள்ளனர்



நாட்டிற்கு ஜூன் மாதத்தின் முதல் 20 நாட்களில் 61,183 சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தரவுகள் தெரிவித்துள்ளன.

ஜூன் மாதத்தில் 87,521 சர்வதேச பார்வையாளர்களை கவர்ந்திழுப்பதை சுற்றுலாத்துறை இலக்காகக் கொண்டுள்ள நிலையில்,

04



03

சமூக நலன்கள் தொடர்பான மேன் முறையீடு;

**ஆட்சேபனைகளை தெரிவிக்க அவசர தொலைபேசி இலக்கம்**



03

தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சி;

**ஜனாதிபதியின் கோரிக்கைக்கு மதிப்பளித்து காத்திருக்கிறோம்**



03

**தென்னகோனுக்கு எதிரான மனு தள்ளுபடி**

செல்லுபடியற்றதாக்கியது நீதிமன்று

## வெளிநாடு செல்வோருக்கு போலி கடவுச்சீட்டுக்கள்

### தயாரித்த குற்றச்சாட்டில் மூவர் கைது



பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களுக்கு, வெளிநாடுகளுக்கு தப்பிச்செல்வதற்காக போலி கடவுச்சீட்டுகளை தயார்படுத்தி வழங்கிய குற்றச்சாட்டில் மூன்று பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால், கடவத்தை பிரதேசத்தில் வைத்து நேற்று முன்தினம் குறித்த மூவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

04

### சில நிபந்தனைகளை பூர்த்தி செய்யாவிடின்

## உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு திட்டத்திற்கு ஆதரவில்லை

### ஐக்கிய மக்கள் சக்தி திட்டவட்டமாக அறிவிப்பு



சில நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாவிட்டால், ஜூலை 01 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு திட்டத்திற்கு ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவளிக்காது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் கடன் குறைப்பு நடவடிக்கைக்கு

04

## நீண்ட வங்கி விடுமுறையிலும் மக்களுக்கு தடையின்றி சேவை

### மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவிப்பு



(லோரன்ஸ் செல்வநாயகம்)

நீண்ட வங்கி விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் பொதுமக்களுக்கு தேவையான வங்கி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தேவையான வசதிகள் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார். அது தொடர்பில் மத்திய வங்கியின் ஆளுநர்

04

## எஹெலியகொட; புஸ்ஸெல்ல விபத்தில் ஐவர் கவலைக்கிடம்

### காயமடைந்த 20 பேர் ஆஸ்பத்திரியில்




(லோரன்ஸ் செல்வநாயகம்)

எஹெலியகொட பிரதேசத்தில் நேற்று காலை இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் 20 பேர் படுகாயங்களுக்குள்ளாகியுள்ளதாகவும் அவர்களின் ஐவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். நேற்றுக் காலை இரத்தினபுரி – கொழும்பு பிரதான வீதியில்

04

# கிழக்கின் குரல்



# மட்டு. வாகநேரி பிரதேசத்தில் சோலார் மின் உற்பத்தி திட்டம்

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் அதிகாரிகள் சகிதம் கள விஜயம்

பாசிக்குடா நிருபர்



மட்டக்களப்பு வாகநேரி வயல் பிரதேசத்தில் கொரியன் கம்பனி ஒன்றினால் அமைக்கப்படவுள்ள, சோலார் மின் உற்பத்தி திட்டத்தின், கள நிலவரங்களை பார்வையிட இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், அதிகாரிகள் சகிதம் சனிக்கிழமை (24) சாப்பமடு வயல் பிரதேசத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்டு நிலைமைகளை அவதானித்தார்.

இத் திட்டத்தினால் வயல் நிலங்களை இழக்கவுள்ள விவசாயிகள் விடுத்த வேண்டுகோளினை அடுத்து, அவர்களுக்கு சுமுகமான தீர்வொன்றினை பெற்றுக்கொடுக்கும் முகமாக அமைச்சர் இவ் விஜயத்தினை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது கிரான் பிரதேச செயலாளர் எஸ்.ராஜ்பாவு, மாவட்ட கமநல திணைக்கள பிரதி விவசாய ஆணையாளர் கே.ஜெகநாத், மகாவலி அதிகாரிகள், வன இலகா அதிகாரிகள், மற்றும் பிரதேச விவசாயிகள் வருகை தந்திருந்தனர்.

இதன்போது தங்களால் வழமை போன்று விவசாயம் செய்கை பண்ணப்படும் விவசாய நிலம் சுமார் 353 ஏக்கர் வயல் நிலம் சோலார் மின் உற்பத்திக்கு பயன்படுத்துவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், இதனால் விவசாயம் செய்து வாழ்வாதாரத்தை மேற்கொள்ள முடியாத நிலைமை ஏற்படக் கூடிய அபாயகரமான சூழ் நிலை உருவாகியுள்ளதாக தெரிவித்தனர்.

அத்துடன் 1952 ஆம் ஆண்டு காலப் பகுதி தொடக்கம் பரம்பரை ரீதியாக விவாயச் செய்கையில் இவ் விடயத்தில் ஈடுபட்டு வந்த நிலம் தற்போது அபிவிருத்தி என்ற போர்வையில் பறிபோகும் நிலமை உருவாகியுள்ளதாகவும் இதனை தடுத்து காணியினை பெற்றுத் தருமாறு அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

இது தொடர்பில் எதிர்வரும் மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டு, சிறந்த முறையில் மக்களுக்கு இடைஞ்சல் இல்லாமல் சோலார் மின் உற்பத்தி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

# சமாதான நீதவான்கள் மையத்தினால் விழிப்புலனற்ற இருவருக்கு திருமணம்



(கல்லடி குறூப், புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்)

மட்டக்களப்பு மாவட்ட சமாதான நீதவான்கள் சமூக மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில், விழிப்புலனற்ற இருவருக்கு திருமணத்தினை நடாத்தி சமூக மேம்பாட்டிற்கான முன்னுதாரண செயற்பாடொன்றினை இச்சங்கத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

ஆரையம்பதியைச் சேர்ந்த பொன்னம்பலம் சுஜிதரன் மற்றும் திருக்கோவிலைச்சேர்ந்தசண்முகம்பிள்ளை சசிவதனி ஆகிய இருவருக்குமே திருமணத்தினை நிகழ்த்தி வைத்துள்ளனர். ஞாயிற்றுக்கிழமை (25) மண்முனைப்பற்று ஆரையம்பதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இடம்பெற்ற திருமண நிகழ்வில், மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி சத்தியானந்தி நமசிவாயம், மட்டக்களப்பு மாவட்ட சமாதான நீதவான்கள் சமூக மேம்பாட்டு மையத்தின் தலைவர் பாவலர் சாந்தி முகைதீன் உள்ளிட்ட சங்க உறுப்பினர்கள் மற்றும் உதயம் விழிப்புலனற்றோர் சங்க உறுப்பினர்கள், திருமண தம்பதியினரின் குடும்ப உறவினர்கள் என பெருமளவிலானோர் வருகை தந்து மணமக்களை வாழ்த்தி ஆசீர்வதித்ததோடு, அன்பளிப்புக்களையும் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தேங்காய் விழுந்து குடும்பப் பெண் மரணம்

(மண்டூர் தினகரன் நிருபர்)

மத்தியமுகாம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட விஜயபுர சடயன்தலாவையில் தலையில் தேங்காய் விழுந்ததில் குடும்பப்பெண் ஒருவர் மரணமான சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (25) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விஜயபுர சடயன்தலாவ பிரதேசத்தைச் சேர்ந்த (62) வயதுடைய இரு பிள்ளைகளின் தாயாரான மாஹேனே கெதர வண்டார மெனிக்கே என்பவரே இவ்விபத்தில் உயிரிழந்தவராவார்.

கடந்த (12)ஆம் திகதி தனது வீட்டில் உள்ள தென்னை மரத்தின் கீழாக நடந்து செல்லும் போது, திடீரென தென்னை மரத்திலிருந்து தேங்காய் தலையில் விழுந்து மத்தியமுகாம் மற்றும் கல்முனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை (25) சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

# பாண்டிருப்பு முத்துமாரியம்மன் ஆலய திருக்குளிர்த்தி உற்சவம் இன்று ஆரம்பம்

பாண்டிருப்பு தினகரன் நிருபர்

பாண்டிருப்பு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த திருக்குளிர்த்தி உற்வசம் இன்று 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிக்கு திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமாகி, எதிர்வரும் யூலை 03 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு 7.30 மணிக்கு நடைபெறும் திருக்குளிர்த்தி வைபவத்துடன் நிறைவடையவுள்ளது.

தொடர்ந்து ஏழு தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் ஜூலை முதலாம் திகதி மாலை 5 மணிக்கு பக்திப்பரவசமூட்டும் துலாக்காவடி நிகழ்வு நடைபெறவுள்ளது. 02 ஆம் திகதி அம்மனின் திருக்குளிர்த்திக் கால் வெட்டுதல், நள்ளிரவு 12 மணிக்கு அம்மனின் தவநிலை வைபவம் நடைபெறும். 03 ஆம் திகதி விநாயகர் பானை எழுந்தருளப் பண்ணல், வட்டுக் குத்துதல், அம்மனது திருக்குழந்தைகளை அழைத்து வருதல், சக்கரையமுது ஆகியன இடம்பெற்று, இரவு 7.30 மணிக்கு சிலம்பொலி, உடுக்கை, மங்கள வாத்தியங்கள் முழங்க அம்பாளுக்கு திருக்குளிர்த்தி பாடப்பட்டு அதன் பின் சமுத்திரத்தில் கும்பம் சொரிதலும், வாழிபாடுதலுடன் திருக்கதவு அடைத்து உற்சவம் இனிதே நிறைவு பெறவுள்ளது.

இங்கு 02 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆலய இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் கல்முனைப் பிரதேசத்திற்குட்பட்ட அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கு இடையில் நடைபெற்ற போட்டிப் பரிட்சையில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விபுலானந்தா சிறுவர் இல்ல மாணவர்களுக்கு உபகரணங்கள்

அட்டாளைச்சேனை குறூப் நிருபர்



அக்கரைப்பற்று விபுலானந்தா சிறுவர் இல்லத்தில் கல்வி பயிலும் வறுமைக் கோட்டின் வாழும் சிறுவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு, கடந்த சனிக்கிழமை இந்து இளைஞர்மன்ற கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட மல்வத்தை இருபத்திநான்காம் பிரிவின் கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் விபுல சந்திரசிறியின் வழிகாட்டலில், அக்கரைப்பற்று 241 காலாட் படைப் பிரிவின் கட்டளைத் தளபதி எல்.டீஎஸ்.டீ.என்.பதிரத்னவினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த சப்பாத்து, அப்பியாசக் கொப்பிகள், பேக்குகள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் ஆகியன உள்ளடக்கப்பட்ட இப்பொதிகள், ஐக்கிய நாடுகள் இராஜியம், அவுஸ்திரேலியா, சுவிஸ்லாந்து போன்ற நாடுகளில் பணிபுரியும் லயன்ஸ் கழக 306 A2 உறுப்பினர்களின் அனுசரணையில் கொள்வனவு செய்யப்பட்டவைகளாகும்.

சிறுவர் இல்லத்ததின் ஸ்தாபகத் தலைவர் ரீ.கைலாயபிள்ளை தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் ஆலயடிவேம்பு பிரதேச செயலாளர் வீ. பபாகரன், மேஜர் ஜெனரல் விபுல சந்திரசிறியின், அக்கரைப்பற்று 241 காலாட் படைப் பிரிவின் கட்டளைத் தளபதி எல்.டீஎஸ்.டீ.என். பதிரத்ன மற்றும் லயன்ஸ் கழக பிரபல உறுப்பினர்களான அகிலன், எஸ்.சிவதாசா, பிரியந்தி தே சில்வா (அவுஸ்திரேலியா), சிரோன் குணவர்தன (ஐக்கிய இராஜ்ஜியம்) எம்.பொன்னசீலம் (சுவிட்சர்லாந்து), டாக்டர் நுவான் மதுசங்க உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு உபகரணங்களை வழங்கி வைத்தனர்.

# நாய்களால் போக்குவரத்திற்கு இடையூறு

(மூதூர் தினகரன் நிருபர்)

மூதூர் பொதுச் சந்தையை அண்டிய கொல்லனாற்று ஆற்றங்கரை ஓரங்களில் வீசப்படும் கழிவுகளை உண்ண வரும் நாய்க் கூட்டங்கள், சந்தைச் சூழலில் அதிகரித்து காணப்படுவதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேலும் மூதூர் பொதுச்சந்தை வீதி வழியாக பொது மக்களும் மற்றும் மாணவர்களும் தினமும் பெருமளவில் பயணித்து வருகின்றனர்.

# போதை பயன்பாட்டை கட்டுப்படுத்த பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும்

## அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி

(ஒலுவில் விசேட நிருபர்)

போதைவஸ்து பாவனையை ஒழித்து, சிறந்த சமூதாயத்தை கட்டியெழுப்ப பொதுமக்கள் பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என, அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் எஸ்.எம்.சதாத் தெரிவித்தார்.

அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாசபையின் ஒலுவில் கிளையின் ஏற்பாட்டில் 2022/2023 ஆண்டு க.பொ.த(சா/த) பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான வழிகாட்டல் செயலமர்வு, ஒலுவில் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் மண்டபத்தில் சனிக்கிழமை (24) நடைபெற்ற செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.



பிரதம பொலிஸ் பரிசோதகர் எஸ். எம். சதாத் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பாடசாலை மாணவர்களிடையே புகைத்தல் மற்றும் போதைவஸ்துப் பாவனை வீதம் அதிகரித்து காணப்படுவதால் இள வயதிலேயே மாணவர்கள் தொற்றா நோய்க்கு ஆளாகி வருகின்றார்கள். ஆரோக்கியமான சமூகமே நாட்டின் மதிப்பிட முடியாத வளமாக உள்ளது. புகைத்தல் மற்றும் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகவுள்ள மக்களை அதிலிருந்து விடுவித்துக் கொள்வதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

சிறந்த சமுதாயத்தை கட்டியெழுப்புவதற்கு எங்கு போதைவஸ்து பாவனை இடம்பெறுகின்றதோ அதனை பொலிஸாருக்கு தெரியப்படுத்த வேண்டும் என்றார்.

# போதை ஒழிப்பு தினத்தை ஒட்டி காத்தான்குடியில் விழிப்புணர்வு



மட்டக்களப்பு குறூப், புதிய காத்தான் குடி தினகரன் நிருபர்

சர்வதேச போதையொழிப்பு தி னம் திங்கட்கிழமை (26) அனுஷ்டிக்கப்பட்டது. இதனையொட்டி காத்தான்குடி பிரதேச செயலகம், பொலிஸ் நிலையம்,சுகாதார வைத்தியதிகாரி பணிமனை, கல்வித் திணைக்களம், கலாசார அதிகார சபை என்பவற்றுடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்த பாரிய விழிப்புணர்வு பேரணியும், வீதி நாடகமும் காத்தான்குடி குர்ஆன் சதுக்கத்தில் பிரதேச செயலாளர் யூ.உதயசிறீதர் தலைமையில் இடம் பெற்றது.

காத்தான்குடி பிரதேச செயலக முன்றலில் ஆரம்பமான மாணவர்களின் விழிப்புணர்வு பேரணி, குர்ஆன் சதுக்கத்தை வந்தடைந்தது.

குர்ஆன் சதுக்கத்தில் நாடகம், உட்பட விழிப்புணர்வு நிகழ்வுகள் இடம் பெற்றன. பிரதேச பிரதி சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் எம்.மீராமுகைதீன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கொத்துப்பந்தல் புதுப்பிக்கும் சடங்கு



(காரைதீவு குறூப் நிருபர்)

கதிர்காம கந்தன் ஆலய கொத்துப் பந்தல் புதுப்பிக்கும் சடங்கு வழமை போல் யானைகளால் ஞாயிற்றுக்கிழமை (25) நடைபெற்றது.

இச் சடங்கு ஆறாம் நாள் சடங்காக பண்டுதொட்டு நடைபெற்று வருகிறது. அதன்படி, முருகன் ஆலயத்தின் கொத்துப்பந்தல் மரக்கிளைகளால் புதுப்பிக்கும் சடங்கும் இந்நாளில் நடைபெற்றது.

முன்னதாக காட்டிலிருந்து வெட்டப்பட்ட மரக்கிளைகளை, வாசனா ஹஸ்திராஜய்யா தலைமையிலான யானை சுமந்துவந்து, மரக்கிளைகளை மாணிக்க கங்கையில் கழுவும்.

கதிர்காம பஸ்நாயக்க நிலமேடிசான் குணசேகர சகிதம் மரக்கிளைகளை யானைகள் தும்பிக்கையால் சுமந்து கொண்டு வந்து கந்தனாலய பந்தலில் இடும். மாணிக்க கங்கையில் கழுவப்பட்ட கிளைகள் ஆலயத்திற்கு முன்பாக போடப்பட்டிருந்த பந்தலில், யானைகளின் மூலம் மாற்றம் செய்யப்பட்டது.அந்த காட்சியை ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து பார்த்து இரசித்தனர்.

# அம்பாறையில் வர்த்தக நிலையங்கள் சுற்றிவளைப்பு

(இறக்காமம் தினகரன் நிருபர்)



வியாபார நிலையங்கள், பல் பொருள் அங்காடிகள், வெதுப்பகங்கள் மற்றும் தனியார் வைத்தியசாலைகள் ஆகியன, நுகர்வோர் விவகார அதிகார சபையின் புலனாய்வு அதிகாரிகளால் சனிக்கிழமை (24) விசேட சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டன.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரின் சுற்றிவளைப்பு கட்டளைப் பத்திரத்தின் அடிப்படையில் நுகர்வோர் விவகார அதிகார சபையின் மாவட்ட பொறுப்பதிகாரி சாலிய நவரத்ன பண்டாரவின் வழிகாட்டலின் கீழ், புலனாய்வு அதிகாரிகள் இவ் விசேட சுற்றிவளைப்பு கடமையில் ஈடுபட்டனர்.

இதன்படி கல்முனை மற்றும் சம்மாந்துறை நீதிமன்ற அதிகார எல்லைக்குட்பட்ட பல பிரதேசங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதில் கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு எதிராக,விலையை காட்சிப்படுத்தாத வர்த்தகர்களுக்கு எதிராக நீதி மன்றத்தினூடாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் சமூக நலன்புரித் திட்டத்தில் புறக்கணிக்கப்பட்ட பொதுமக்கள், மூதூர் பிரதேச செயலகத்தில் மேன் முறையீடு செய்ய வருகை தந்துள்ளதை படத்தில் காணலாம். (படம்: தோப்பூர் தினகரன் நிருபர்)

# ஜனாதிபதி தலைமையில் ஆளும் கட்சியின் விசேட கூட்டம் நாளை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



தேசிய கடன் மறுசீரமைப்பு சம்பந்தமான யோசனையை விவாதத்திற்கு எடுத்துக் கொள்வது தொடர்பாக எதிர்வரும் முதலாம் திகதி பாராளுமன்ற அமர்வை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன. அதுதொடர்பில் இறுதித் தீர்மானமொன்றை எடுப்பதற்காக இன்றைய தினம் விசேட பாராளுமன்ற விவகாரங்கள் தொடர்பான குழுக் கூட்டம் இடம்பெறவுள்ளதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அந்த வகையில் எதிர்வரும் சனிக்கிழமை முழுநாள் விவாதத்தை முன்னெடுத்து விவாதத்தின் இறுதியில் வாக்களிப்பு ஒன்றை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த அவசர பாராளுமன்ற அமர்வு காரணமாக அனைவரையும் கொழும்பில் தங்கியிருக்குமாறு ஆளும் கட்சியின் பிரதம அமைப்பாளரின் அலுவலகம் ஆளும் கட்சி எம்.பிக்கள் மற்றும் அமைச்சர்களுக்கும் அறிவுறுத்தியுள்ளது.

அதேவேளை வெளிநாட்டு விஜயங்களை மேற்கொள்ள வேண்டாமென்றும் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேவேளை மேற்படி விடயம் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக ஆளும் கட்சி உறுப்பினர்களின் கூட்டமொன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நாளை (28) நடைபெறவுள்ளது.

அதேவேளை தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் விசேட பேச்சுவார்த்தையொன்றை ஐக்கிய மக்கள் சக்தி நேற்று மேற்கொண்டுள்ளதுடன் அங்கு பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டதாக அந்தக் கட்சியின் வட்டாரங்கள் தெரிவித்தன.

## தொல்லியல் விவகாரத்தில்

# மதத்தலைவர்களது தலையீடு நிறுத்தப்பட வேண்டும்



தொல்பொருளியல் விவகாரத்தில் பௌத்த தேரர்கள் தலையிடுவதை நிறுத்த வேண்டும். அவர்களது செயற்பாடுகளாலேயே வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள மக்களுக்கு காணி அபகரிப்பு குறித்து வீண் அச்சம் ஏற்படுகிறது. இதுகுறித்து பௌத்த தேரர்களிடம் பல சந்தர்ப்பங்களில் நேரடியாக தெரிவித்துள்ள போதிலும், அவர்கள் அதனை ஏற்க முன்வரவில்லை என புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

தொல்பொருளியல் என்பது சட்டத்துக்குட்பட்ட விடயமாகும். தொல்பொருள் கட்டளை சட்டம் இன்றும் நடைமுறையிலுள்ளது. அதனை அனைவரும் பின்பற்ற வேண்டும். அத்தோடு இந்த விவகாரத்தில் பௌத்த தேரர்களும், அரசியல்வாதிகளும் தலையிடுவதையும் நிறுத்த வேண்டும். சட்டத்துக்கமைய தொல்பொருள் திணைக்களத்துக்கு மாத்திரம் அதன் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு இடமளிக்க வேண்டும்.

அதனை விடுத்து தொல்பொருள் திணைக்களம் ஆய்வுகளை முன்னெடுக்கும் பகுதிகளுக்குச் சென்று அங்கு சில பௌத்த தேரர்களால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் காரணமாக வீண் பிரச்சினைகள் தோற்றம் பெறுகின்றன. எனவே இந்த விடயத்தில் தலையிடுவதை அவர்கள் நிறுத்த வேண்டும்.

இந்து ஆலயங்களை அழிப்பதற்கோ, தமிழ் மக்களின் காணிகளை அபகரிப்பதற்கோ எந்த நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை. தொல்பொருள் திணைக்களத்தினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள இடங்களில் மாத்திரமே அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்த விடயத்தை அடிப்படையாகக் கொண்டு அரசியல் இலாபத்தை ஈட்ட முயற்சிக்காமல் மக்களின் உண்மையான பிரச்சினைகளுக்கு தீர்வினை வழங்க வட, கிழக்கு அரசியல்வாதிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

# ஜனாதிபதி ரணில் நேற்று நாடு திரும்பினார்



உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு பிரித்தானியா மற்றும் பிரான்ஸிற்கு சென்றிருந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாடு திரும்பியுள்ளார்.

ஜனாதிபதி உள்ளிட்ட தூதுக்குழுவினர் நேற்று காலை 09.10 மணியளவில் எமிரேட்ஸ் எயார்லைன்ஸ் விமான சேவைக்கு சொந்தமான EK650 ரக விமானத்தின் ஊடாக துபாயில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

# இந்திய இறக்குமதி முட்டைகள் பேக்கரி தேவைக்கு மட்டுமே

## பிற கடைகளுக்கு விற்பதற்கு அனுமதியில்லை



இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு பேக்கரிகளுக்கு வழங்கப்பட்ட முட்டைகளை பிற கடைகளுக்கு விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளதாகவும், அவ்வாறு விற்பனை செய்வது கண்டறியப்பட்டால், வெளியில் விற்கும் பேக்கரிகளுக்கு முட்டை வழங்குவது உடனடியாக நிறுத்தப்படும் என்றும் அரச வர்த்தக பல்வேறு சட்டப்பூர்வ நிறுவனங்களின் தலைவர் ஆசிறி வலிசுந்தர தெரிவித்துள்ளார்.

பேக்கரி உரிமையாளர்

04

## சமூக நலன்கள் தொடர்பான மேன் முறையீடு;

# ஆட்சேபனைகளை தெரிவிக்க அவசர தொலைபேசி இலக்கம்

## நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

சமூக நலன்கள் தொடர்பான மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளை தெரிவிக்க அவசர தொலைபேசி இலக்கம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளதாக பதில் நிதியமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் (25) அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்தியில் இதனை குறிப்பிட்டுள்ளார். இதற்கமைய, சமூக நலன்கள் தொடர்பான மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளை நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பிரதேச செயலகங்களுக்கும் தனிப்பட்ட முறையில் வழங்குவதற்கு அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும், online முறையின் மூலம் அந்த மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளை சமர்ப்பிக்க முடியாத நபர்களுக்கு அதற்கேற்ப வசதிகள் செய்து தரப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும், திங்கட்கிழமை முதல் வெள்ளி வரை காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை 1924 என்ற அவசர இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்தி தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கதிர்காமம் பஸ் தரிப்பு நிலையம் நேற்று வைபவ ரீதியாக திறப்பு

## அமைச்சர் பந்துல குணவர்தனவினால் இரண்டு புதிய பஸ்களும் கையளிப்பு




**லோரன்ஸ் செல்வநாயகம்**

கதிர்காமம் புனித பூமிக்கு வருகை தரும் யாத்திரிகர்கள் மற்றும் மக்களின் வசதி கருதி புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள பிரதான பஸ் தரிப்பு நிலையம் நேற்றைய தினம் போக்குவரத்து,

04

# மகாவலி ஆற்றில் நீராடிய இரு சிறுவர்கள் பலி!

## உறவினர்களுடன் நீராடுகையில் அனர்த்தம்



பல்லேகல, தென்னக்கும்புர பாலத்துக்கு அருகில் உள்ள மகாவலி ஆற்றில் நீராடிக் கொண்டிருந்த இரண்டு சிறுவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் இருவரும் உறவினர்களுடன் நீராடிக் கொண்டிருந்த போதே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட இருவரும் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர். அம்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 15 வயதுடைய இரண்டு சிறுவர்களே உயிரிழந்தவர்களாவர்.


## விஷேட அறிவித்தல்

### SC(FR)884/99 என்ற உயர் நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் பொது மக்களுக்கான அறிவித்தல்

எப்பாவள பொஸ்பேட் வளம் தொடர்பான உயர்நீதிமன்ற வழக்கு இலக்கம் SC(FR)884/99 என்ற கட்டளையின் பிரகாரம் தேசிய விஞ்ஞான மன்றம் மற்றும் தேசிய விஞ்ஞான அக்கடமியின் அறிவுறுத்தல்களிற்கமைவாக புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத்தினால் பொஸ்பேட் வளம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வறிக்கையானது பொதுமக்களின் பார்வைக்காக புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கங்கள் பணியகத்தின் சுற்றாடல் அமைச்சின் மற்றும் கைத்தொழில் அமைச்சின் உத்தியோக இணையதள பக்கத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**பதில் பணிப்பாளர் நாயகம்,**
**புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கங்கள் பணியகம்,**
**இல. 569, எப்பிட்டமுல்ல வீதி,**
**பிட்டகோட்டே.**

**தொ. பே. இல. 0112 886271, 0112 886289, 0112 886290**

**இணையதளம்: www.gsmb.gov.lk**
**மின்னஞ்சல் முகவரி: dg@gsmb.gov.lk**


# தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சி;

# ஜனாதிபதியின் கோரிக்கைக்கு மதிப்பளித்து காத்திருக்கிறோம்

## சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு



தமிழர்களின் பிரச்சினைககளுக்கு தீர்வு காணும் முயற்சி தொடர்பில் ஜனாதிபதியின் கோரிக்கைக்கு மதிப்பளித்து காத்திருக்கிறோம் என தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் கூறுகையில், தமிழர் பிரச்சினைக்கான தீர்வாக ஜனாதிபதியிடம் இலங்கைத் தமிழரசுக் கட்சி கோரிக்கைகளை முன்வைத்துள்ளது. அது தொடர்பில் ஆராய்ந்து ஜூலை மாதத்தின் பின் உரிய நடவடிக்கை எடுப்பதற்கே ஜனாதிபதி இவ்வாறு கால அவகாசம் விதித்துள்ளார்.

அதுவரை நாம் பொறுமையுடன் காத்திருக்கின்றோம். எமது பிரச்சினைக்கான தீர்வைத் தேடி நாம் இந்தியா செல்ல வேண்டிய தேவை இல்லை. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் பேசி தீர்வைப் பெற்றுக் கொள்ளலாம் என்று நாம் நம்புகின்றோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தென்னகோனுக்கு எதிரான மனு தள்ளுபடி

## செல்லுபடியற்றதாக்கியது நீதிமன்று

**லோரன்ஸ் செல்வநாயகம்**



மேல் மாகாணத்துக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு மற்றும் அழைப்பாணையை மேன்முறையீட்டு நீதிமன்றம் செல்லுபடியற்றதாக்கியுள்ளது.

போராட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகைக்குள் பிரவேசித்த சந்தர்ப்பத்தில் அங்கிருந்த 01 கோடியே 78 இலட்சத்துக்கும் அதிகமான நிதியை கண்டெடுத்த சம்பவம் தொடர்பில் சந்தேக நபராக நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கொழும்பு கோட்டை மஜிஸ்திரேட் நீதிமன்றத்தினால் மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கு விடுத்திருந்த அழைப்பாணையை செல்லுபடியற்றதாக்கி மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

தேசபந்து தென்னகோன் தாக்கல் செய்திருந்த ரிட் மனு தொடர்பான தீர்ப்பை வழங்கிய போதே மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி நிசங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஏ.மரிக்கார் ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழுவினால் மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கடந்த வருடம் மே மாதம் 09ஆம் திகதி காலிமுகத் திடலில் இடம்பெற்ற போராட்டத்தின் போது போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்திய சம்பவத்துடன்

04


## விலைமனு கோரலுக்கான அழைப்பு

### பதிவாளர் நாயகம் திணைக்களம்

### சுத்திகரிப்பு சேவைகளை வழங்குதல்

இத்திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் 65 பிரதேச கிளை அலுவலகங்களுக்கு 2023.10.16ஆந் திகதி தொடக்கம் 2024.10.15ஆம் திகதி வரை சுத்திகரிப்பு ஊழியர்களை ஈடுபடுத்தி சுத்திகரிப்பு சேவைகளை வழங்குவதற்காக திணைக்கள பெறுகைக்குழு தலைவரினால் 2023.07.19ஆந் திகதி பி.ப. 2.00 வரை விலைமனு கோரல்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

விலைமனு ஆவணங்களுக்கமைய விலைமனு கோரப்பட்டுள்ள அனைத்து அலுவலகங்களுக்கும் அல்லது வலய ரீதியில் பட்டியல்படுத்தப்பட்ட அலுவலக குறிப்பில் வலயத்திற்கு கீழ் எடுக்கப்பட்ட அனைத்து அலுவலகங்களுக்கும் விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான வாய்ப்பு காணப்படுகின்றது. விலைமனு ஆவணங்களை 2023.07.19ஆம் திகதி மு.ப. 11.00 வரை இத்திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தின் 'சரப்' இற்கு மீளளிக்கப்படாத ரூ. 12,500.00 கட்டணத்தினை செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினை கணக்காளரிடம் (வழங்கல்) சமர்ப்பித்து பெற்றுக் கொள்ள முடியும். மேலதிக விபரங்களை தொலைபேசி இலக்கம் 011 3070870 வாயிலாக கணக்காளரிடம் (வழங்கல்) பெற்றுக் கொள்ள முடியும். தேவை இருப்பின் இலவசமாக விலைமனுக்கோரல் ஆவணங்களை இவ்அலுவலகத்தில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்களை முத்திரையிடப்பட்ட 2 பிரதிகளாக விலைமனு நிபந்தனைகளுக்கமைய ரூபா 550,000.00 விலைமனு பாதுகாப்புடன் இவ் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகை பெட்டியில் இடுவதற்கு அலலது பதிவுத் தபாலில் 'பதிவாளர் நாயகம், பதிவாளர் திணைக்களம், இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை' எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். விலைமனு இடப்பட்டு முத்திரையிடப்பட்ட தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் 'சுத்திகரிப்பு சேவைகள் வழங்குவதற்கான விலைமனுக்கோரல் 2023/07 என குறிப்பிடப்படுதல் வேண்டும்.

இவ்விலைமனுக்கள் 2023.07.19ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு திறக்கப்படுவதுடன் அதன் பின்னர் எந்த விதத்திலும் கிடைக்கப் பெற்று விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**பதிவாளர் நாயகம்,**
**பெறுகைக் குழு தலைவர்.**

**பதிவாளர் நாயகம்,**
**பதிவாளர் நாயக திணைக்களம்,**
**இல. 234/ஏ3,**
**டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்லை.**


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

ஞாயிற்றுக்கிழமை 2023.06.25
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 5156 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 21,792,907.00
ஆங்கில எழுத்து X — வெற்றி இலக்கங்கள் 2 5 3 8 6 6

**தன நிதானய** — 1186 — ரூ. 96,959,611.20
ஆங்கில எழுத்து L — வெற்றி இலக்கங்கள் 01 43 54 67

**ஹந்தஹன** — 465 — ரூ. 2,500,000.00
வெற்றி இலக்கங்கள் 02 18 45 58

**ஜாதிக சம்பத** — 1611 — ரூ. 12,946,048.32
வெற்றி இலக்கங்கள் 8 2 1 2 9 7

**கொவிசெத** (Govisetha) — சீட்டிழுப்பு இலக்கம் 3398 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 65,759,842.00
ஆங்கில எழுத்து J — வெற்றி இலக்கங்கள் 06 24 52 55

**Mega Power** — 1504 — ரூ. 332,223,302.00
F 15 — 08 11 31 67
ரூ. 10,000,000.00
ரூ. 10,000,000.00

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலிய டொலர் | 201.29 | 215.00 |
| கனடியன் டொலர் | 224.47 | 239.42 |
| யூரோ | 324.45 | 344.53 |
| ஜப்பான் யென் | 2.1010 | 2.2276 |
| சிங்கப்பூர் டொலர் | 220.86 | 235.11 |
| ஸ்ட்ரேலிங் பவுன் | 379.69 | 402.23 |
| சுவிஸ் பிராங்க் | 329.51 | 352.41 |
| அமெரிக்க டொலர் | 298.47 | 314.49 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரைன் டினார் | 811.99 | கட்டார் ரியால் | 84.04 |
| குவைத் டினார் | 996.76 | சவூதி ரியால் | 81.61 |
| ஓமான் ரியால் | 795.16 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 83.34 |

# கொழும்பின் பெறுமதியான 40 இடங்கள் அபிவிருத்தி

## முதலீடுகளுக்கு வழங்க அரசு நடவடிக்கை

(லோரன்ஸ் செல்வநாயகம்)

பாரம்பரிய பெறுமதிமிக்க தேசிய மரபு ரீதியான இடங்களை இனங்கண்டு அவற்றை முதலீடுகளுக்காக கையளிக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க கொழும்பு மற்றும் கொழும்பை அண்டிய பிரதேசங்களில் அவ்வாறு 40 இடங்கள் இனங்காணப்பட்டுள்ளன. அவற்றை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளை நகர அபிவிருத்தி அதிகார சபை மேற்கொள்ளவுள்ளதாக அந்த அதிகார சபையின் தலைவர் நிமேஷ் ஹேரத் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு இனங்காணப்பட்டுள்ள 40 இடங்களும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் செலவில் அபிவிருத்தி செய்யப்பட்டு அந்த செலவை ஈடுசெய்யும் வகையில் அவற்றை நீண்டகால மற்றும் குறுகிய கால குத்தகை அடிப்படையில் முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி வேலைத்திட்டத்தின் கீழ் நகர அபிவிருத்தி அதிகார சபையானது 40 கோடி ரூபாவுக்கும் அதிகமான செலவில் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள கொழும்பு 7 'எயிட் கிளப்' நிறுவனம் அண்மையில் மீள திறக்கப்பட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்த சுற்றாடலில் உணவகங்கள், மாநாட்டு அறைகள் மற்றும் சினிமா திரையரங்குகள் உள்ளிட்ட நவீன வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த செயற்பாடுகள் வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# 'றாபிதா அந்நளீமிய்யீன்' பழைய மாணவர் அமைப்பின் ஒன்றுகூடல்

## எதிர்வரும் 02, 03ஆம் திகதிகளில் பேருவளையில்

(அஜ்வாத் பாஸி)

ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தின் பொன்விழா நிகழ்வுகளின் மற்றொரு பிரதான அங்கமாக அதன் பழைய மாணவர் அமைப்பான 'றாபிதா அந்நளீமிய்யீன்' பழைய மாணவர் ஒன்றுகூடலும் 9ஆவது பொதுக்கூட்டமும் எதிர்வரும் ஜூலை 2, 3 ஆம் திகதிகளில் ஜாமிஆ நளீமிய்யா வளாகத்தில் இடம்பெறவுள்ளன.

இரண்டு நாட்கள் இடம்பெறவுள்ள மேற்படி நிகழ்வுகளில் இஸ்லாமிய அழைப்புப் பணி, சமூக வாழ்வு, வேற்றுமைக்கிடையில் ஒற்றுமை , சமாதான சகவாழ்வு, சமூக மற்றும் கல்வித் துறைப் பங்களிப்பு, தேசிய நலன் ஆகி யவற்றில் நளீமீக்களின் பங்களிப்பு ஆகிய தலைப்புகளில் கலந்துரையாடல்கள் இடம் பெறவுள்ளதுடன், பல்வேறு விளையாட்டுப் போட்டிகள், கலை கலாசார நிகழ்ச்சிகளும் நடைபெற திட்டமிடப்பட்டுள்ளன.

இரண்டாம் நாள் நிகழ்வாக றாபிதாவின் பழைய மாணவர் அமைப்பினது 09 ஆவது பொதுக் கூட்டம் இடம்பெறவுள்ளதோடு, அடுத்த மூன்று வருடங்களுக்கான மத்திய செயற்குழு, பிராந்திய செயற்குழுக்களுக்கான பதவி தாங்குனர்களும் தெரிவு செய்யப்படவுள்ளதாக றாபிதாவின் தலைவர் அஷ்ஷெய்க் சட்டத்தரணி தாஜுதீன் ஷாகிர் தினகரனுக்கு தெரிவித்தார்.

## அசௌகரியம் ஏற்படுத்தும் யாசகர்களை;

# யாசகர்களை ஹம்பாந்தோட்டைக்கு கொண்டு செல்ல வேலைத்திட்டம்

## அமைச்சர் நிமால் தலைமையில் முக்கிய பேச்சுவார்த்தை

லோரன்ஸ் செல்வநாயகம்



கொழும்பு காலிமுகத்திடல் உள்ளிட்ட முக்கிய பொழுதுபோக்கு இடங்களில் யாசகர்களினால் உல்லாசப் பிரயாணிகள் மற்றும் மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை தடுக்கும் வகையில் முக்கிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக துறைமுக அமைச்சு தெரிவித்துள்ளது.

அவ்வாறு 150 க்கும் மேற்பட்ட யாசகர்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் அவர்களை ஹம்பாந்தோட்டை ரிதிகமவில் அமைந்துள்ள சமூக சேவை புனர்வாழ்வு மத்திய நிலையத்திற்கு அனுப்பி பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

கொழும்பு காலிமுகத்திடல் உள்ளிட்ட மக்கள் சுதந்திரமாக பொழுதுபோக்கும் பகுதிகளில் யாசகர்களின் செயற்பாடுகளினால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகவும் அதற்கு தீர்வு காணும் வகையிலேயே இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

துறைமுக அதிகார சபைக்கு சொந்தமான காலிமுகத்திடல் பிரதேசத்தில் பாரிய செலவில் அப்பகுதியை எழில்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொளப்பட்டுள்ளன. அத்துடன் மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளும் அங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்தகைய சூழ்நிலையில் சுதந்திரமாக பொழுதைக் கழிப்பதற்காக அங்கு வரும் மக்களுக்கு அசௌகரியம் ஏற்படுத்தும் வகையில் யாசகர்களில் செயற்பாடுகள் இடம் பெறுவதாக துறைமுக அதிகார சபைக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அதனைக் கவனத்திற் கொண்டே துறைமுக அதிகார சபை மற்றும் பொலிஸ் திணைக்களம் ஆகியன இணைந்து மேற்படி வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதாக அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் முக்கிய பேச்சுவார்த்தையொன்று துறைமுக, விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிரிபால டி சில்வாவின் தலைமையில் அமைச்சில் இடம் பெற்றுள்ளது. இந்த நிகழ்வில் அமைச்சின் செயலாளர் கே .டி. எஸ். ருவன்சந்ர ,துறைமுக அதிகார சபையின் தலைவர் கீன் பேர்னார்ட் மற்றும் துறைமுக அதிகார சபையின் அதிகாரிகள், பொலிஸ் திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டுள்ளனர்.

## லிற்றோ எரிவாயுவின்...

மாதத்தின் முதல் பகுதியில் அவ்வாறு விலைக் குறைப்பை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளதாக குறிப்பிட்டார்.

லிற்றோ கேஸ் நிறுவனம் அண்மையில் சமையல் எரிவாயுவுக்கான விலைக் குறைப்பை மேற்கொண்டிருந்தது.

தற்போது உலக சந்தையில் சமையல் எரிவாயுவின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ள நிலையில் அதன் பிரதிபலனை மக்களுக்கு வழங்கும் வகையிலேயே இந்த விலைக் குறைப்பை மேற்கொள்ளவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## CPC நிறுவனத்துக்கு ...

வகையில் கூட்டுத்தாபனம் செயற்படவுள்ளதோடு எதிர்காலத்தில் எரிபொருளின் விலையை குறைக்க நடவடிக்கை எடுப்போம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த இலாபத்தை பெறுவதற்கு திறமையின்மை மற்றும் முறைகேடுகளை தவிர்க்கும் திறனே முக்கிய காரணம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## முன்னாள் அமைச்சர்...

முன்னாள் சுகாதார அமைச்சர் சிறில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த மின்தூக்கியில் முன்னாள் அமைச்சருடன் சென்ற அவரது வாகன சாரதியும் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது. வீட்டின் மூன்றாம் மாடியில் மேற்கொள்ளப்பட்டு வரும் திருத்தப் பணிகளை பார்வையிடுவதற்காக மின்தூக்கி மூலம் சென்றபோது இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## எஹெலியகொட; ...

புஸ்ஸெல்ல பயிற்சி நிலையத்திற்கு அருகில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் தனியார் பஸ்ஸொன்றுநிறுத்திவைக்கப்பட்டிருந்த அதிசொகுசு பஸ்ஸொன்றின் மீது மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி விபத்தில் அதிசொகுசு பஸ் சருக்கி முன்னால் சென்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றுடனும் வான் ஒன்றுடனும் மோதியுள்ளதாகவும் அதன்போது 20 பேர் காயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

காயமடைந்தவர்கள் எஹெலியகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## 60 வகையான...

புதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், 500 மில்லி கிராம் பரசிட்டமோல் மாத்திரை ஒன்றின் விலை 3 ரூபா 49 சதங்களாக குறைக்கப்பட்டுள்ள அதேவேளை, இன்சுலின் 10 மில்லிகிராம் குப்பியின் அதிகபட்ச சில்லறை விலை 2270 ரூபா 2 சதமாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அத்துடன், 375 மில்லிகிராம் அமோக்ஸிலின் கிளாவுலினிக் அமிலத்தின் அதிகபட்ச சில்லறை விலை 70 ரூபா 32 சதங்களாக குறைக்கப்பட்டுள்ளது.

## எதிர்வரும்...

யில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

டெங்குவை ஒழிப்பதற்கு அனைவரின் உதவியும் முக்கியமானது என அவர் வலியுறுத்தினார். ஏனெனில் அரசாங்கமோ அல்லது சுகாதார அதிகாரிகளோ டெங்கு வைரஸை தாங்களாகவே கட்டுப்படுத்த முடியாது.

இந்த வருடம் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் தெளிவான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், ஜனவரி மாதம் முதல் இதுவரை 47,000 க்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் வைத்தியர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்துள்ளார்.

இதுவரை பதிவுசெய்யப்பட்ட நோயாளர்களில் அதிகமானோர் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் எனவும், சுகாதாரம் மற்றும் பாதுகாப்புப் பிரிவினர் இணைந்து இந்தப் பிரதேசங்களில் உள்ள குப்பைகளை சுத்தப்படுத்துவதற்கான விசேட முயற்சியொன்றை முன்னெடுக்கவுள்ளதாகவும் வைத்தியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## ஒரே சீனா...

இச்சந்திப்பின் போது, வெளிவிவகார அமைச்சர், சீனா ஒரு சிறந்த நண்பர், முக்கி யமான அபிவிருத்தி பங்காளி என்றும், சீன அரசாங்கத்தின் தன்னலமற்ற உதவியை இல ங்கை பாராட்டுவதாகவும் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார்.

இலங்கையில் சீன நிறுவனங்களிடம் இருந்து மேலும் முதலீடுகளை தான் வரவழைப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, இலங்கையும் சீனாவும் எப்பொழுதும் ஒருவரையொருவர் மதித்து ஆதரவளித்து, சகவாழ்வு மற்றும் பரஸ்பர நன்மை பயக்கும் ஒத்துழைப்பிற்கு சிறந்த முன்னுதாரணமாக விளங்குவதாகவும், இலங்கையுடனான தனது பங்காளித்துவத்தை பலப்படுத்தவும் விரிவுபடுத்தவும் சீனா தயாராக இருப்பதாகவும் சீன வெளிவிவகார அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

## வெளிநாடு செல்வோருக்கு ...

கைதானவர்கள் கிரில்லவல, பிலியந்தலை மற்றும் பன்னிப்பிட்டிய ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 52 முதல் 58 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருட்களுடன் கைதான குறித்த மூவரும், கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினால் தடுத்து வைத்து விசாரிக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## உள்நாட்டு கடன்...

சென்றால், உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு திட்டத்தை தமது கட்சி ஆதரவளிக்காது என்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

அதேநேரம், உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை எதிர்வரும் 28 ஆம் திகதி அமைச்சரவையில் சமர்ப்பித்து, 29 ஆம் திகதி பொது நிதிக் குழுவுக்குப் பரிந்துரைத்து, சனிக்கிழமையன்று பாராளுமன்றத்தில் ஒப்புதல் பெறுவதற்கான திட்டங்களை எதிர்க்கட்சிகள் கேட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்த விடயம் தொடர்பில் தம்முடனும் எதிர்க்கட்சித் தலைவருடனும் தொலைபேசியில் உரையாடினார் என்று குறிப்பிட்ட ஹர்ஷ டி சில்வா, அந்த தொலைபேசி உரையாடல் தொடர்பான விபரங்களை வெளியிடவில்லை.

## நீண்ட வங்கி...

நேற்று கருத்து தெரிவிக்கையில், அரசாங்கத்தினால் நீண்ட வங்கி விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ள போதும் எந்த விதத்திலும் வங்கிகளுடனான கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளில் பாதிப்பு

ஏற்பட மாட்டாது. குறிப்பாக சாதாரண விடுமுறை நாட்களில் மேற்கொள்ளப்படும் வங்கி நடவடிக்கைகள், ஒன்லைன் வங்கி கொடுக்கல் வாங்கல்கள், இணையத்தளம் மூலம் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்கள் ஆகியவற்றுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது.

சில வங்கிகள் விடுமுறை தினங்களிலும் அதன் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன. அந்த வகையில் இந்த நீண்ட விடுமுறை காலத்திலும் அவ்வாற செயற்பாடுகளுக்கு எந்த தடையும் கிடையாது. தேசிய கடன் மறுசீரமைப்பு முழுமையான நிறைவு செய்யும் வகையில் தேவையான காலத்தை பெற்றுக் கொடுப்பதற்காக எதிர்வரும் 30ஆம் திகதி வங்கிவிடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அன்றைய தினத்தை அரசாங்கம் விசேட வங்கி விடுமுறை தினமாக அறிவித்துள்ள நிலையில் கொழும்பு பங்குச் சந்தை நடவடிக்கைகளுக்கும் அன்றைய தினம்

விடுமுறைத் தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இலங்கை...

நல்லிணக்க ஆணைக்குழுவை அமைக்கும் என்றும் அவர் கூறினார்.

இந்திய விஜயத்தின் போது அங்குள்ள ஊடகங்களுத்து கருத்து தெரிவிக்கையிலேயே அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ மேற்கண்டவாறு கூறினார்.

புலம்பெயர் தமிழர்கள் மற்றும் உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் இலங்கை மக்கள் மற்றும் தலைவர்களுடன் அரசாங்கம் தொடர்ச்சியான தொடர்புகளை மேற்கொண்டு வருகிறது. பிரதமர் மோடி தலைமையிலான இந்திய அரசாங்கத்திடமிருந்து எங்களுக்குக் கிடைத்த ஆதரவுடன் நாங்கள் எங்கள் பெரும்பாலான பிரச்சினைகளைத் தீர்த்தோம்.

இலங்கையில் இயல்பு நிலையை மீண்டும் கொண்டு வருவோம் என்று நாங்கள் நம்புகிறோம். 2022 இல் இலங்கை முன்னெப்போதும் இல்லாத நிதி நெருக்கடியால் பாதிக்கப்பட்டது. இது நாட்டில் அரசியல் கொந்தளிப்பைத் ஏற்படுத்தியது. இந்த நெருக்கடியானது ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தை உருவாக்குவதற்கும் வழிவகுத்தது. பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கும் பொருளாதாரத்தின் நிதி ஆரோக்கியத்தை மீட்டெடுப்பதற்கும் அரசாங்கம் போராடி வருகிறது.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ பல முயற்சிகளை எடுத்தோம். 2016 ஆம் ஆண்டு சகல செயற்பாடுகளையும் ஆரம்பித்து, காணாமல் போனவர்களுக்கான அலுவலகங்கள், சமாதானத்தை ஏற்படுத்துதல் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த செயல்பட்டோம்.

இலங்கை அரசாங்கம் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவை நிறுவவுள்ளதுடன், அனைத்து சமூகங்களுடனும் ஒருமித்த கருத்துடன் நீண்டகால சமாதானத்தை உறுதிப்படுத்த முயற்சிக்கிறோம்.

பல பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டுள்ளோம். பல வழக்குகள் இருந்தன, பல கைதிகள் இருந்தன. இருப்பினும், இப்போது இந்த பிரச்சினைகள் அனைத்தும் மாறியுள்ளன. இலங்கை அனைத்துப் பிரச்சினைகளையும் ஒவ்வொரு கோணத்தில் இருந்து தீர்த்து வருகிறது என்றார்.

## இலங்கை தாய்லாந்து...

அந்த வகையில் நேற்றைய தினம் ஐந்தாவது சுற்றுப் பேச்சுவார்த்தை கொழும்பில் ஆரம்பமானதுடன் அதன் 6 வது சுற்று பேச்சுவார்த்தை எதிர்வரும் ஆகஸ்ட் 21 ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை தாய்லாந்தில் இடம் பெறவுள்ளன.

கொழும்பு தாஜ்சமுத்திரா ஹோட்டலில் நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பமான ஐந்தாவது சுற்று பேச்சுவார்த்தையின் ஆரம்ப அமர்வில் உரையாற்றிய சர்வதேச வர்த்தக அலுவலக இலங்கைப் பிரதிநிதிகள் குழுவின் பேச்சாளர் கே.ஜே. வீரசிங்க, உடன்பாடு காணப்பட்ட காலவரையறையின்படி நடைமுறைப்படுத்தப்படுகின்ற இலங்கை தாய்லாந்து சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் குறித்து திருப்தி அடைய முடியும் என்று குறிப்பிட்டார்.

அடுத்த கட்டப் பேச்சுவார்த்தை தாய்லாந்தில் ஆகஸ்ட் 21 முதல் 23, வரை நடைபெறும் என்றும், 2024 மார்ச்சில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் என்றும் அவர் தெரிவித்தார். 2024ஆம் ஆண்டு பெப்ரவரியில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள இறுதிப் பேச்சுவார்த்தைக்கு முன்னதாக மேலும் மூன்று சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த வகையில் ஐந்தாவது சுற்றுப் பேச்சுவார்த்தை எதிர்வரும் 28ஆம் திகதி புதன்கிழமை வரை கொழும்பில் நடைபெறவுள்ளது.

உலகளாவிய பொருளாதாரத்துடன் இணைவதற்கான இலங்கை அரசாங்கத்தின் நோக்கத்தை தாய்லாந்து பிரதிநிதிகளுக்கு விளக்கிய வீரசிங்க, பிராந்திய விரிவான பொருளாதார பங்காளித்துவத்தில் (RCEP) அங்கம் வகிப்பதற்காக, இலங்கையின் பொருளாதார பிரவேசத்தை முதலில் தெற்காசியாவிலும் பின்னர் அதை கிழக்கு நோக்கியும் விரிவுபடுத்தும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் எதிர்பார்ப்பை தாய்லாந்து தூதுக்குழுவிடம் விளக்கினார்.

பிராந்திய விரிவான பொருளாதார பங்காளித்துவத்திற்கான (RCEP) செயலகமாகவும் செயல்படும் ஆசிய செயலகத்தின் செயலாளர் நாயகம் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளுடன் இலங்கை ஏற்கனவே இது குறித்து ஆராய்ந்துள்ளது. ஆசிய மற்றும் பிராந்திய விரிவான பொருளாதாரம் பங்காளித்துவம் ஆகிய இரு துறைகளிலும் தாய்லாந்தின் தீவிர பங்களிப்பைக் கருத்தில் கொண்டு, பிராந்திய விரிவான பொருளாதார பங்காளித்துவத்தில் (RCEP)இணைவதற்கு இலங்கை தாய்லாந்தின் ஆதரவை எதிர்பார்ப்பதாகவும் வீரசிங்க குறிப்பிட்டார்.

தாய்லாந்தின் வர்த்தக பேச்சுவார்த்தைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவுரமன் சுப்தாவிதும் (Auramon Supathaweethum) ஒன்லைன் தொழில்நுட்பத்தின் ஊடாக பங்குபற்றியதோடு, இலங்கைக்கான தாய்லாந்து தூதுவர் போஜ் ஹர்ன்பொல்(Poj Harnpol) உள்ளிட்ட தாய்லாந்து பிரதிநிதிகளும், சர்வதேச ஊடகத்துறை தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ஷேனுகா செனவிரத்ன , ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் சாந்தனி விஜயவர்தன, பிரதி பிரதான பேச்சுவார்த்தையாளர் ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் எஸ்.டபிள்யூ.சி. ஜயமினி உள்ளிட்ட இலங்கை பிரதிநிதிகளும் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

## டிஜிட்டல் மயப்படுத்தும்...

ராவய அமைப்பு விடுத்த வேண்டுகோளை வரவேற்றுள்ள தொழில், வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார அந்த யோசனையை பாராட்டியுள்ளார்.

எந்தவித முன்னறிவித்தலும் இல்லாமல் திடீரென அமைச்சுக்குள் பிரவேசித்துள்ள சிங்கள ராவய அமைப்பின் அக்மீமன தயாரட்ன தேரர் உள்ளிட்ட குழுவினரை அமைதியாக வரவேற்றுள்ள அமைச்சர், தாம் கலந்து கொண்டிருந்த நிகழ்விலிருந்தும் விடைபெற்றுக் கொண்டு அவர்களுக்காக சில நிமிடங்களையும் ஒதுக்கி கலந்துரையாடியுள்ளார்.

நாட்டுக்கு அதிகமான அந்நிய செலாவணி வெளிநாட்டு வேலை வாய்ப்பு மூலமே கிடைத்து வருகிறது. எனினும் வெளிநாட்டு வேலை வாய்ப்பில் ஈடுபட்டுள்ள எமது நாட்டவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பல சிக்கல்களுக்கு முகம் கொடுக்க நேர்கிறது. எனினும் அவற்றை முகாமைத்துவம் செய்வது தொடர்பில் முறையான வேலைத் திட்டங்கள் எதுவும் கிடையாது.

அதற்கான ஒரே தீர்வு வெளிநாட்டு வேலை வாய்ப்பு துறையை டிஜிட்டல் மயப்படுத்துவதே. அவ்வாறான செயற்பாடு முன்னெடுக்கப்படும் போது எமது நாட்டவர்கள் அங்கு எதிர்கொள்ளும் சிக்கல்களை இங்கிருந்தே அதிகாரிகள் அதன் மூலம் கண்டறிய முடியும். உடனடியாகவே அவற்றுக்கு தீர்வை பெற்றுக் கொடுக்கவும் முடியும் என்றும் அந்த குழுவினர் அமைச்சருக்கு தெளிவுபடுத்தியுள்ளனர்.

அதற்கு பதிலளித்துள்ள அமைச்சர், வெளிநாட்டு வேலை வாய்ப்புத் துறையை டிஜிட்டல் மயப்படுத்தும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

## ஜூன் மாத முதல்...

தனது இலக்கில் 70 சதவீதத்தை அடைந்துள்ளது. அதன்படி, நாடு இலக்கை அடைய ஜூன் 21 30 காலப் பகுதியில் 26,338 சுற்றுலாப் பயணிகளைக் கொண்டு வர வேண்டும். அதற்கு நாளாந்தம் சராசரியாக 2,633 பேர் வருகை தரவேண்டும்.

இந்த ஆண்டில் ஜனவரி மாதம் 1 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 20 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 585,669 சுற்றுலா பயணிகள் வரை நாட்டுக்குள் வந்துள்ளனர். ஜூன் மாதத்தில் இதுவரை நாளாந்த வருகை சராசரியாக 3,059 ஆக உள்ளது. எவ்வாறாயினும், ஜூன் முதல் வாரத்தில் தினசரி சுற்றுலா பயணிகளின் வருகை 19,365 ஆகவுள்ளது. மேலும், வாரத்தில் இரண்டு வருகைகள் 20,541 ஆக அதிகரித்துள்ளது. மூன்றாவது வாரத்தில், சுற்றுலாப் பயணிகளின் வருகை சற்று மேம்பட்டு 20,986 ஆக இருந்தது. அதற்கமைய, குறித்த காலப்பகுதியில் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவில் இருந்தே நாட்டிற்கு வருகைத் தந்துள்ளனர்.

ஜூன் மாதத்தில் மொத்த வருகையில் 28 சதவீதம் பேர் இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ளார்கள். இரண்டாம் இடத்திலுள்ள ரஷ்யாவில் இருந்து 9 சதவீதம் பேரும் மூன்றாவது இடத்தில் உள்ள ஐக்கிய இராச்சியத்திலிருந்து 7 சதவீதம் பேரும் வருகை தந்துள்ளனர். தரவரிசையில் அவுஸ்திரேலியா நான்காவது இடத்திலும், சீனா ஒரு தரவரிசை முன்னேறி ஐந்தாவது இடத்திலும் உள்ளது.

இதுதவிர, கனடா, ஜேர்மனி, அமெரிக்கா, மாலைதீவுகள் மற்றும் பிரான்ஸ் ஆகியவை ஆகிய நாடுகளின் சுற்றுலாப்பயணிகளும் இலங்கை வந்துள்ளதாக அந்த அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

## கதிர்காமம் பஸ் தரிப்பு... (03 ஆம் பக்கத் தொடர்)

ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தனவினால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

கதிர்காம தேவாலயத்திற்கு கிடைக்கும் நிதி, மற்றும் நன்கொடைகள் மூலம் இராணுவத்தினரால் ஒரு மாத காலத்தில் இந்த பஸ் தரிப்பு நிலைய நிர்மாணிப்புப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் சமகாலத்தில் அப்பகுதி கிராமிய பொது போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தும் வகையில் இலங்கை போக்குவரத்து சபையால் இரண்டு புதிய பஸ் வண்டிகள் சேவைக்காக வழங்கப்பட்டதுடன் அமைச்சர் பந்துல குணவர்தன உத்தியோகபூர்வமாக கையளித்தார்.

கிரிவெஹெர விகாராதிபதி உட்பட பௌத்த தேரர்கள், அமைச்சின் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## இந்திய இறக்குமதி... (03 ஆம் பக்கத் தொடர்)

ஒருவருக்கு வழங்கப்பட்ட ஒரு தொகுதி முட்டையை அவரது சகோதரரின் கடையில் விற்பனைக்கு வழங்கியதன் காரணமாக பேக்கரி உரிமையாளருக்கு முட்டை வழங்குவது உடனடியாக நிறுத்தப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்தியாவில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்வதற்கான மற்றொரு காரணம் உள்ளூர் முட்டை விலையை குறைப்பதாகவும், உள்ளூர் முட்டைகளின் தட்டுப்பாடு நீங்கி விலை சீராகும் வரை இந்தியாவில் இருந்து முட்டை இறக்குமதி செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், தினமும் பத்து இலட்சம் முட்டைகள் தொடர்ச்சியாக இறக்குமதி செய்யப்படுவதாகவும் தெரிவித்தார்.

## தென்னகோனுக்கு... (03 ஆம் பக்கத் தொடர்)

தொடர்புடைய சந்தேக நபராக தேசபந்து தென்னகோனை பெயரிடுமாறு சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவையும் மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று செல்லுபடியற்றதாக்கி தீர்ப்பளித்துள்ளது.

## டெங்கு நோயாளர்... (06 ஆம் பக்கத் தொடர்)

நீங்கள் வசிக்கும் சுற்றாடலை தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டியதும் அவசியமாகும். நோய் கட்டுப்பாட்டினை ஒருவரால் மாத்திரம் செய்துவிட முடியாது. இந்நாட்டில் அனைவரிதும் ஒத்துழைப்பு தேவை.

டெங்கு நோய்க்கு இலக்கானவரெனின் கடினமான வேலைகளில் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும். ஓய்வு தேவை. அவ்வாறு இல்லாவிட்டால் நோயின் பாதிப்பு அதிகரிக்கும். காய்ச்சல் ஏற்படும் போது பெரசிடமோல் தவிர்ந்த ஏனைய மருந்துகளை எடுத்துக்கொள்வதைத் தவிர்க்க வேண்டும். எந்த ஒரு காய்ச்சல் நோயாளிக்கும் வேறு மருந்துகளை வழங்குமாறு வைத்தியர்கள் பரிந்துரைக்கவில்லை. சில நேரங்களில் பெரசிடமோல் மருந்தினால் நோய் முழுமையாக குணமடையாமல் இருக்கலாம். அந்தச் சந்தர்பங்களில் நோயாளர்கள் அச்சப்படவேண்டிய அவசியம் இல்லை. ஓய்வெடுப்பதால் பாதிப்புகளை குறைத்துக் கொள்ள முடியும். இளநீர்,தேசிக்காய், தோடம்பழம், ஜீவனி உள்ளிட்ட திரவ வகைகளை உட்கொள்வது மிகவும் உகந்தது.









ஐ.டி.எம் நேசன் பல்கலைக்கழகத்தின் தலைவரும், ஜனனம் அறக்கட்டளையி பிரதான அறங்காவலரும், தேசிய ஒருமைப்பாட்டு முன்னணியின் தலைவருமான கலாநிதி ஜனகன் விநாயகமூர்த்தி, தனது பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (26.06.2023) கொட்டாஞ்சேனை ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்திலும் கொழும்பு, கங்காரம விஹாரையிலும் தெவட்டகஹா ஜும்ஆ பள்ளிவாசலிலும் மற்றும் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையிடமும் ஆசிர்வாதம் பெற்றுக் கொண்டார். அத்துடன் கொச்சிக்கடை பிரதேசத்தில் வாழும் குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகளும் மற்றும் கொட்டாஞ்சேனை பிரதேசத்தில் உள்ள அங்கவீன சிறுவன் ஒருவனுக்கு சக்கர நாற்காலி ஒன்றையும் வழங்கி வைத்தார். இதற்கான சகல ஏற்பாடுகளையும் அதிவணக்கத்திற்குரிய பிதா அருட்கலாநிதி சந்துரு பெர்னாண்டோ மேற்கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

மறைந்த முன்னாள் அமைச்சர் மர்ஹூம் நூர்தீன் மசூர் ஞாபகார்த்தமாக

# மன்னார் எருக்கலம்பிட்டியில் 14 ஆவது வருடாந்த ஹஜ் விழா

மன்னார் எருக்கலம்பிட்டி சமூக அபிவிருத்தி மற்றும் ஜனாஸா நலன்புரி சங்கம் ஏற்பாடு செய்த 14 ஆவது வருடாந்த ஹஜ் விழா எதிர்வரும் 30.06.2023 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

மன்னார், எருக்கலம்பிட்டி தேசிய பாடசாலை மைதானத்தில் தொடர்ச்சியாக மூன்று நாட்களுக்கு ஹஜ் விழா நடைபெறுவதாக ஏற்பாட்டுக்குழு உறுப்பினர், H. N. M. பஸ்மின் தெரிவித்தார். மறைந்த முன்னாள் அமைச்சர் மர்ஹூம் நூர்தீன் மசூர் ஞாபகார்த்தமாக இவ்வருடம் ஹஜ் விழா நடைபெறவுள்ளது.

இவ்விழாவின் போது, கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள், கலை கலாசார மற்றும் பாரம்பரிய நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

கடந்த காலங்களில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளின் போது, ஊரை விட்டு இடம்பெயர்ந்து நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வாழும் எருக்கலம்பிட்டி மக்களின் ஒன்றுக் கூடலாக இது அமையவுள்ளது. மர்ஹூம் நூர்தீன் மசூர் வன்னி புனர்வாழ்வு அமைச்சராக பதவி வகித்த காலத்தில் இந்த ஹஜ் விழாவை ஆரம்பித்து வைத்தமை குறிப்பிடத்தக்கது.



# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மூவர் பேராசிரியர்களாக பதவி உயர்வு

***(யாழ் விசேட, யாழ்ப்பாணம் குறூப் நிருபர்கள்)***

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மூவர் பேராசிரியர்களாகப் பதவி உயர்வு பெற்றுள்ளனர். சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மூவரே இவ்வாறு பேராசிரியர்களாக பதவி உயர்வு பெற்றுள்ளனர். பொறியியல், விவசாயம் மற்றும் இந்து கற்கைகள் ஆகிய பீடங்களைச் சேர்ந்த மூன்று சிரேஷ்ட விரிவுரையாளர்களை பேராசிரியர்களாக பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை நேற்று ஒப்புதல் வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்றுமுன்தினம் (25), ஞாயிற்றுக்கிழமை காலை, துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் நடைபெற்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களின் மதிப்பீடு, நேர்முகத் தேர்வு முடிவுகள் நேற்றைய பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அதன்படி மூவர் பேராசிரியர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பொறியியல் பீடத்தின் மின் மற்றும் இலத்திரனியல் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி எம். கே. அகிலன் மின் மற்றும் இலத்திரனியல் துறையில் பேராசிரியராகவும் , விவசாயப் பீடத்தின் விவசாய உயிரியல் துறைத்தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி க. பகீரதன் விவசாய உயிரியல் துறையில் பேராசிரியராகவும், இந்து கற்கைகள் பீடத்தின் இந்து நாகரிகத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி (திருமதி) விக்னேஸ்வரி பவநேசன், இந்து நாகரிகத் துறையில் பேராசிரியராகவும் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.



தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சோபகிருது வருடம் ஆனி மாதம் 12ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 துல்ஹிஜ்ஜா பிறை 07


**குறள் தரும் சிந்தனை**

கவறும் கழகமும் கையும் தருக்கி
இவறியார் இல்லாகி யார்

சூதாடும் இடம், அதற்கான கருவி, அதற்குரிய முயற்சி ஆகியவற்றைக் கைவிட மனமில்லாதவர்கள் எதுவும் இல்லாதவர்களாகவே ஆகிவிடுவார்கள்.

# தகுதியானோர் அனைவருக்கும் அசுவெஸ்ம நலன்புரி நன்மைகள்

கடந்த வருடத்தின் ஆரம்பப் பகுதியில் நாடு முகம்கொடுத்திருந்த பொருளாதார நெருக்கடியில் இருந்து கட்டம் கட்டமாக மீட்சி பெற்று வந்த நிலையில் தற்போது மறுமலர்ச்சிப் பாதையில் பிரவேசித்திருக்கிறது. இந்நிலையில் பொருளாதார ஸ்திரத்தன்மை தேவைப்படும் நபர்களுக்கு உதவும் நோக்கில் எதிர்வரும் ஜுலை முதலாம் திகதி முதல் 'அஸ்வெசும ஆறுதல் வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

33 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்களை இலக்காகக் கொண்டு முன்னெடுக்கப்படும் இத்திட்டத்தின் ஊடாக சமூகத்திலுள்ள இடைநிலை, பாதிக்கப்படக்கூடிய, வறிய மற்றும் மிகவும் வறுமையான குடும்பங்களுக்கு 04 பிரிவுகளின் கீழ் கொடுப்பனவுகள் பெற்றுக் கொடுக்கப்படவிருக்கின்றன. அத்தோடு அங்கவீனமானவர்கள், முதியவர்கள் மற்றும் சிறுநீரக நோயாளர்கள் ஆகியோருக்கும் இத்திட்டத்தின் ஊடாக இந்த நலன்புரி நன்மைகள் வழங்கப்படவுள்ளன.

இத்திட்டத்தின் ஊடாக தற்காலிக நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்திருக்கும் 04 இலட்சம் பேருக்கு ரூபா 2500.00 வீதம் மாதாந்தக் கொடுப்பனவு 2023 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும், மேலும் பாதிக்கப்படக் கூடிய 04 இலட்சம் பேருக்கு ரூபா 5000.00 வீதம் கொடுப்பனவு 2024 ஜுலை 31 வரையிலும், வறியோர் என்று அறியப்பட்ட பயனாளிகள் 08 இலட்சம் பேருக்காக ரூபா 8500.00 வீதமும், மிக வறுமையானவர்களுக்காக மாதாந்தம் ரூபா 15,000.00 வீதமும் 2023 ஜுலை 01 முதல் மூன்று வருட காலத்திற்கு வழங்கப்படவுள்ளது.

தற்போது நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளும் 72,000 மாற்றுத் திறனாளிகளுக்கு மாதாந்தம் ரூபா 5000.00 வீதமும், சிறுநீரக பாதிப்புக்கான நிவாரணங்களை பெறும் 39,150 பேருக்கு ரூபா 5000.00 வீதமும் முதியவர்களுக்கான கொடுப்பனவுகளை பெறும் 416,667 பேருக்கு ரூபா 2000.00 படியும் கொடுப்பனவுகள் பெற்றுக்கொடுக்கப்பட உள்ளன.

இதற்கேற்ப இத்திட்டத்திற்கென தகுதியானவர்களிடமிருந்து ஏற்கனவே விண்ணப்பங்கள் கோரப்பட்டு தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களின் பெயர் விபரமும் வெளியாகியுள்ளன.

ஆனால் இந்நலன்புரி கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளக்கூடிய தகுதியைக் கொண்டிருந்தும் தாம் தெரிவு செய்யப்படவில்லை எனச் சிலர் ஆட்சேபனை தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ள அரசாங்கம், ஜுலை மாதம் 10 ஆம் திகதி வரை மேன்முறையீடு செய்யவென காலஅவகாசம் வழங்கியுள்ளது. இந்நலன்புரி கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளத் தகுதி கொண்டுள்ளவர்களை தாமதமின்றி மேன்முறையீடு செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ள அரசாங்கம், தகுதியானவர்களைத் தெரிவு செய்வதில் குறைபாடுகள் இருப்பின் அது உடனடியாக நிவர்த்தி செய்யப்படும் என்றும், இது தொடர்பில் எதிர்வரும் வாரங்களில் மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட சகல தரப்பினருடனும் கலந்துரையாடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளதோடு அரசியல் தூண்டுதல்கள் அல்லது வெளி அழுத்தங்களுக்கு அடிபணியாமல் இவ்வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும்' என்றும் கூறியுள்ளது.

இவ்வறிவிப்பு பொருளாதார ஸ்திரத்தன்மை தேவைப்படும் நபர்களுக்கு நம்பிக்கை அளிக்கக் கூடியதாக உள்ளது. அவர்கள் இவ்வறிப்பை வரவேற்றுள்ளனர். நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடி வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு பொருளதாதார ரீதியில் தாக்கங்களையும் அழுத்தங்களையும் ஏற்படுத்தியது. அந்த அழுத்தங்கள் மக்களுக்கு சுமையாக அமைவதைத் தவிர்க்கும் வகையில் ஏற்கனவே பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இருப்பினும் இம்மக்களின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு நலன்புரி நன்மைகளைப் பெற்றுக் கொடுக்கும் வகையில்தான் ஜுலை முதலாம் திகதி முதல் அசுவெஸ்ம திட்டம் நடைமுறைக்கு கொண்டு வரப்படவிருக்கின்றது. இத்திட்டத்தின் ஊடாக வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறும் மக்கள் நன்மைகள் பெற்றுக்கொள்ளும் போது அவர்களது பொருளாதாரம் பலமடையும், அதுவே அம்மக்களின் பிரதான தேவையும் எதிர்பார்ப்பும் ஆகும். இம்மக்களைக் கைதூக்கிவிடுவதே இத்திட்டத்தின் இலக்காகும்.

ஆன போதிலும் இத்திட்டத்தின் ஊடாக வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறும் மக்கள் பிரதிபலன்களை அடைந்து கொள்வதைப் பொறுத்துக் கொள்ள முடியாத எதிரணியினர், இத்திட்டத்தை மலினப்படுத்தி சீர்குலைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். அவர்களது முயற்சிகளின் நோக்கங்களை மக்கள் அறியாதவர்கள் அல்லர்.

இவ்வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதில் அரசாங்கம் உறுதியுடன் செயற்படுகிறது. அதற்கு மேன்முறையீடுகளை ஏற்றுக்கொள்ள காலஅவகாசம் வழங்கப்பட்டிருப்பதும் இத்திட்டத்தின் கீழ் உள்வாங்கத் தகுதி கொண்டுள்ளவர்கள் உள்வாங்கப்படாத குறைபாடுகள் இருப்பின் அதனை உடனடியாக நிவார்த்தி செய்ய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருப்பதும் நல்ல உதாரணங்களாகும்.

ஆகவே அசுவெஸ்ம ஆறுதல் நலன்புரி நன்மைகளை பெற்றுக் கொள்வதற்கான தகுதி கொண்டுள்ள அனைவருக்கும் அது நிச்சயம் கிடைக்கப்பெறும். அதுவே அரசின் உறுதிப்பாடாகும்.

editor.tkn@lakehouse.lk

# டெங்கு நோயாளர் எண்ணிக்கை வேகமாக அதிகரிக்கும் அபாயம்!

## மக்களை எச்சரிக்கிறார் விசேட வைத்திய நிபுணர் ஆனந்த விஜேவிக்ரம

## நுளம்புகள் பெருகுவதைக் கட்டுப்படுத்துவதும், பாதுகாப்புப் பெறுவதும் அவசியம்

டெங்குநோய் பரவலை கட்டுப்படுத்துவதற்காக சுகாதார அமைச்சின் வழிகாட்டலில் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. டெங்கு ஒழிப்பு திட்டத்தினை அரச, தனியார் துறைகள் மற்றும் பொதுமக்களையும் ஒன்றிணைத்தவாறு முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும். தொடர்ச்சியாக இந்த வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் பட்சத்தில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த முடியும்.

எதிர்வரும் பருவகாலத்தைத் தொடர்ந்து டெங்கு நோய் பரவல் அதிகரிக்கக் கூடும். பொதுவாக ஜூலை மாதத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பைக் காண முடியும். அந்த வகையில் எதிர்வரும் நாட்களில் நோயாளர்கள் அதிகரிக்க கூடும் என்பதால் அனைத்து துறையினரும் அவதானத்துடன் செயற்பட வேண்டியது அவசியமாகும்.



டெங்குநோய் எந்த வயதினரையும் பாதிக்கும். பதிவாகும் நோயாளர்களில் 75 சதவீதமானவர்கள் 15 வயதுக்கு மேற்பட்டவர்கள். இதற்கு முன்பாக சிறுபிள்ளைகள் அதிகமாக பாதிக்கப்பட்டாலும் தற்போது இளைஞர்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். டெங்கு என்பது ஒருவகை வைரஸ் நோயாகும். டெங்கு நோயாளர்களை டெங்கு நுளம்புகள் குத்தும் பட்சத்தில் அந்த நுளம்பினால் ஏனையவர்களுக்கு டெங்கு நோய் பரவுகின்றது.



நுளம்புகள் பெருகக் கூடிய பகுதிகளை துப்புரவாக வைத்திருப்பது மிகவும் அவசியமாகும். தூய்மையான நீர் சேரும் பகுதிகளிலேயே டெங்கு நுளம்புகள் பெருகும். பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்ட பிளாஸ்டிக், டயர், பூச்சாடிகள் உள்ளிட்ட பொருட்கள் இருக்கும் இடங்களில் டெங்கு நோய் அதிகரிக்கும். இப்பகுதிகள் தொடர்பில் அவதானம் செலுத்தி அவற்றை துப்புரவாக வைத்திருக்க வேண்டியது அவசியமாகும். அதேபோல் நுளம்பிலிருந்து பாதுகாப்பு பெறுவதும் அவசியமாகும்.

டெங்கு நோய்க்கு இலங்கானவர்கள் மற்றையவர்களுக்கு பரவாமலிருக்கும் வகையில் நுளம்பிலிருந்து பாதுகாப்பு பெறுவது அவசியமாகும். உடலை முழுமையாக மறைக்கும் உடைகளை பயன்படுத்த வேண்டும். பூச்சு விரட்டித் திரவியங்கள் ஊடாகவும் நுளம்புக் கடியிலிருந்து பாதுகாப்பு பெற முடியும். எவ்வாறாயினும் இந்த முறை 100 சதவீதம் பலன் தராது.

பிரதேச சபைகள், நகரசபைகள், பொதுச்சுகாதார அதிகாரிகள் உள்ளிட்ட சுகாதாரப் பிரிவுகள், பாதுகாப்புப் பிரிவுகளின் பங்களிப்புடன் நுளம்பு பெருகும் இடங்களை தூய்மைப்படுத்தும் முயற்சிகள் இடம் பெற்று வருகின்றன. டெங்குநோய் அதிகளவில் பரவும் மாகாணங்களை மையப்படுத்திய விசேட வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக நோயாளர்கள் பதிவாகும் கம்பஹா, கொழும்பு மாவட்டங்களில் எதிர்வரும் வாரங்களில் விசேட வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அப்பகுதிகளில் காணப்படும் கழிவுகளை அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்படும். அதற்காக இராணுவத்தின் ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்படவுள்ளது.

நீர் நிரம்பிய பாத்திரங்களில் நீரை அகற்றினாலும் குடம்பிகள் தங்கியிருக்கக் கூடும். எனவே நீர் நிரம்பாத வகையில் பாதுகாக்க வேண்டும். பொதுவாக ஐந்து அல்லது ஆறு நாட்கள் மாத்திரமே நுளம்புகள் உயிர்வாழும். அதனால் வாராந்தம் சுற்றுச்சூழலை தூய்மைப்படுத்த வேண்டும். (04 ஆம் பக்கம் பார்க்க)

# வடமராட்சி அல்வாயில் ஞாயிறன்று முருகபூபதியின் நூல் வெளியீட்டு அரங்கு




அவுஸ்திரேலியாவிலிருந்து வருகை தந்துள்ள படைப்பிலக்கியவாதியும் ஊடகவியலாளருமான லெ. முருகபூபதியின் நுல்களின் வரிசையில் 30 ஆவது வரவாக வெளிவந்துள்ள 'சினிமா: பார்த்ததும் கேட்டதும்' வெளியீட்டு அரங்கு எதிர்வரும் 02 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (02.07.2023) மாலை 400 மணிக்கு வடமராட்சி அல்வாய் கலைஅகத்தில் எழுத்தாளர் கொற்றை பி. கிருஷ்ணானந்தன் தலைமையில் நடைபெறும்.



யாழ். ஜீவநதி வெளியீடாக வந்துள்ள 'சினிமா: பார்த்ததும் கேட்டதும்' நூலின் வெளியீட்டுரையை எழுத்தாளர் இ.சு. முரளீதரன் நிகழ்த்துவார். இந்நூல் பற்றிய தமது கருத்துரையை 'அலை' யேசுராசா வழங்குவார்.

நூலாசிரியர் லெ. முருகபூபதி தனது ஏற்புரையுடன் தனது இலக்கிய அனுபவங்கள் குறித்தும் பேசுவார். அல்வாய் அலை அமைப்பின் 59 ஆவது கூட்டத் தொடராக இந்நிழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு: ஜீவநதி ஆசிரியர் கலாமணி பரணீதரன்.

இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கலை, இலக்கிய ஆர்வலர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# தமிழ் இலக்கிய உலகில் ஆற்றல்மிகு இலக்கியப் படைப்பாளி முருகையன்

## அன்னாரின் 14 ஆவது நினைவு தினம் இன்று

கவிஞர் இ. முருகையன் எமது காலத்தில் ஆற்றல் மிக்க படைப்பாளியாக விளங்கியவராவார். அவரது படைப்புகள் நவீன தமிழ்க் கவிதை உலகில் நிலைத்திருக்கின்றன. இ.முருகையன் 27.06.2009 அன்று தமது 74 ஆவது வயதில் காலமானார். அவரது கவிதைகளும், நாடகங்களும் என்றும் நிலைத்து நிற்கும் வரலாற்று ஆவணங்களாகின்றன.

ஈழத்தின் முன்னணிக் கவிஞர்களுள் ஒருவரான இ. முருகையன் யாழ் தென்மராட்சியில் கல்வயல் கிராமத்தில் ஏப்ரல் 23, 1935 இல் பிறந்தவர். அவர் தமிழ் அறிஞராகவும், திறனாய்வாளராகவும் சீரிய முற்போக்குச் சிந்தனையாளராகவும் விளங்கினார்.

அவர் தனது ஆரம்பக் கல்வியை கல்வயல் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும், இடைநிலைக்கல்வியை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் கற்றார். யாழ். வித்துவான் க. கார்த்திகேசுவிடம் தமிழ் கற்ற முருகையன் உயர்கல்வியை இலங்கைப் பல்கலைக்கழகத்தின் கொழும்பு வளாகத்தில் பயின்று 1956 ஆம் ஆண்டில் விஞ்ஞானப் பட்டதாரியானார்.

அவர் 1950 முதல் ஏராளமான கவிதைகள், சில காவியங்கள், மேடைப் பாநாடகங்கள், வானொலிப் பாநாடகங்களை எழுதியுள்ளார். திறனாய்வுக் கட்டுரைகள், கவிதை மொழிபெயர்ப்பு என்பவற்றின் சிறந்த படைப்பாளியுமாவார்.




இதன் பின்னர்1961 ஆம் ஆண்டில் லண்டனில் கலைமாணிப் பட்டத்தைப் பெற்றார். 1985 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டம் பெற்றார். யாழ் பல்கலைக்கழகம் இவரது இலக்கியப் பணியைப் பாராட்டி கலாநிதி பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. காவியங்கள், மேடைப் பாநாடகங்கள், வானொலிப் பாநாடகங்கள் முதலியவற்றையும் எழுதியுள்ளார்.

அத்துடன் திறனாய்வுக் கட்டுரைகள், கவிதை மொழிபெயர்ப்பு என்பவற்றிலும் ஈடுபட்டார். 1964_ 1965 காலப்பகுதியில் வெளிவந்த 'நோக்கு' என்ற காலாண்டுக் கவிதை இதழின் இணையாசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் 1956 இல் விஞ்ஞான ஆசிரியப் பணியைத் தொடங்கி பின், அரச மொழித் திணைக்களத்தில் மொழிபெயர்ப்பாளராகவும், பாடநூல் வெளியீட்டுத் திணைக்களத்தில் முதன்மைப் பணிப்பாளராகவும், கோப்பாய் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் விரிவுரையாளராகவும், முல்லைத்தீவு, வவுனியா, யாழ் மாவட்டங்களில் கல்விப் பணிப்பாளராகவும் பணியாற்றினார்.

இறுதியாக, 1986 இல் யாழ் பல்கலைக் கழகத்தில் முதுதுணை பதிவாளராகப் பணியாற்றி 1995 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றார். இலங்கை அரசகரும மொழிகள் திணைக்களத்தில் பணியாற்றிய முருகையன் தமிழ் கலை சொல்லாக்கத்துக்கு கணிசமானளவு பங்களிப்பினைச் செலுத்தியுள்ளார்.



அறிவாயுதமாகவும், அரசியல் ஆயுதமாகவும், வர்த்தகத் தொழில் நுட்ப ஆயுதமாகவும் மொழி பயன்பட வேண்டும். அப்பொழுதுதான் அந்த மொழி முன்னேறிய மொழியாகும், என்று தன் வாழ்வையே தமிழ் இலக்கியத்துக்காக பதிவு செய்த முருகையனுக்கு அரசினால் எழுத்தாளர்களுக்கு வழங்கப்படும் அதிஉயர் விருதான சாகித்திய ரத்னா விருது 2007 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது.

முருகையன் எழுதிய ஒருவரம், நெடும்பகல், அது அவர்கள், மாடும் கயிறு அறுக்கும், நாங்கள் மனிதர், ஒவ்வொரு புல்லும் பூவும் பிள்ளையும், ஆதிபகவன் ஆகிய கவிதைநூல்கள் முக்கியத்துவம் பெற்ற படைப்புகளாகும்.

இவர் எழுதிய, 'மொழிபெயர்ப்பு நுட்பம் ஓர் அறிமுகம்' என்னும் நூல் மொழிபெயர்ப்பின் தேவையானது நாள்தோறும் வளர்ந்து பெருகிக் கொண்டிருக்கும் இச்சூழலில் மிகவும் அவசியமானது ஆகும்.

ஐங்கரன் விக்கினேஸ்வரா...

# இலங்கையில் சுற்றுலாத்துறையை மேம்படுத்த USAID, SLTDA அறிமுகப்படுத்தும் திட்டம்

சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் நிறுவனமும் (USAID) இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையும் (SLTDA) இணைந்து சுற்றுலாத்துறையில் பல முக்கிய புதிய பிரிவுகளை அறிமுகப்படுத்தியதன் மூலம் இலங்கையில் வீழ்ச்சியடைந்திருந்த சுற்றுலாத்துறைக்கு புத்துயிரளித்துள்ளன. சாகச சுற்றுலாப்பயணம் முதல் கலாசார அனுபவங்கள் ஆரோக்கியம் மற்றும் குணப்படுத்தும் சிகிச்சைகள் என்பன வரையாக உள்ளடங்கியிருக்கும் இப்பிரிவுகள் இலங்கைக்கு வரும் உல்லாசப் பயணிகளுக்கு கூடுதல் அனுகூலங்களை வழங்குவதோடு அதிகளவிலான சர்வதேச ரீதியில் உல்லாசப் பயணிகளையும் கவருமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த வருடத்தின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இலங்கைக்கான உல்லாசப் பயணிகளின் வருகையானது முதல் காலாண்டில் 30 வீதம் அதிகரித்துள்ளது. கொவிட் தொற்றுநோயின் தாக்கத்திலிருந்து மீண்டு தற்போது பொருளாதார நெருக்கடியைக் கையாள்வதற்கு சுற்றுலாத்துறையானது இலங்கையின் பொருளாதாரத்திற்கு முக்கியமானதாகும்.



"இலங்கையில் இந்த ஆண்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது" என்று இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான USAID பணிப்பாளர் Gabriel Grau விசேட வெளியீட்டு நிகழ்வில் தெரிவித்தார்.

பாணந்துறையில் உள்ள பார்ன்ஹவுஸில் நடைபெற்ற இந்நிகழ்வில் Gabriel Grau மேலும் கூறுகையில் "கொவிட் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக பல வருடங்களாக பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து தற்போது உலகளாவிய சுற்றுலாத் தலமாக இலங்கை மாற்றமடைவதற்கு தயாராக உள்ளது. இலங்கையின் சுற்றுலாத் துறை மீண்டும் முன்னைய பாதையில் செல்லவும், நாட்டின் பொருளாதார மீட்சியை மேம்படுத்தவும் இது உதவும். இலங்கையில் பொருளாதார ஸ்திரத்தன்மை திரும்புவதற்கு USAID ஆதரவளிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். 75 வருடங்களாக அமெரிக்கா இலங்கையுடன் இணைந்து



பணியாற்றியுள்ள நிலையில் இது ஒரு வலுவான கூட்டாண்மையாகத் தோற்றமளிக்கிறது" என்றார்.

"இலங்கையில் ஒரு புதிய நிலையான சுற்றுலா மூலோபாயத்தை நாங்கள் ஆரம்பிப்பதால் இன்று இலங்கையின் சுற்றுலாவுக்கு ஒரு சிறப்பான நாள்" என்று SLTDA இன் துணை பணிப்பாளர் நாயகம் உபாலி ரத்நாயக்க கூறினார்.




# இரக்க உணர்வும் நம்பிக்கையும்

இரக்க உணர்வு என்பது நம் நம்பிக்கையின் இதயத்தில் இருக்கும் ஒரு வார்த்தை என்றும், இது மனித குலத்தின் துன்பங்களில் முழுமையாகப் பங்கேற்கும் கடவுளின் அன்பை நமக்குக் காட்டுகிறது என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்

கடந்த, வியாழனன்று, ROACO எனப்படும் இளையோர் அமைப்பின் ஆண்டு நிறையமர்வுக் கூட்டத்தின் பங்கேற்பாளர்களுக்கு வழங்கிய உரையில் இவ்வாறு தெரிவித்த திருத்தந்தை, ஊடுருவக் குத்தப்பட்ட கடவுளின் இதயம், பிறரன்புப் பணியை ஒரு தொழிலாக, நன்மையின் அதிகாரத்துவம் அல்லது அதைவிட மோசமான தன்னிச்சையான நலன்களின் வலையமைப்பாக நினைப்பதிலிருந்து நம்மை விடுவிக்கிறது என்றும் தெரிவித்துள்ளார்

கிறிஸ்தவர்களாகிய நமக்கு, திறந்த இதயத்துடன் இறைவார்த்தையைக் கேட்பது உண்மையிலேயே நன்மை பயக்கிறது என்று கூறிய திருத்தந்தை, நம் சொந்தத் திட்டங்களால் அல்ல, எல்லா மனிதர்களையும் அரவணைத்து மீட்க விரும்பும் கடவுளின் இரக்கமுள்ள திட்டத்தால் இயேசுவின் சகோதரர் சகோதரிகளாகிய நம்மை ஒளிரச் செய்து வழிநடத்த அனுமதிப்பதும் மிகச் சிறந்ததாகவே அமையும் என்றும் உரைத்தார்.

# வாழும் நற்செய்தியாக விளங்கும் புனிதர்கள் பேதுரு, பவுல் திருவிழா

## ஜூன் 29ல் திருச்சபை சிறப்பிக்கின்றது



திருச்சபையின் தலை சிறந்த தூண்களான புனிதர்கள் பேதுரு, பவுல் ஆகியோரின் திருவிழாவை கத்தோலிக்க திருச்சபை ஜூன் 29 ஆம் திகதி கொண்டாடப்படுகிறது

பேதுரு தன் இனமக்களுக்கும், பவுல் பிறஇன மக்களுக்கும் நற்செய்தி அறிவித்தார்கள். இரு வேறு குணநலன்களை கொண்டிருந்தாலும், தங்களது ஆர்வத்தில் குறைவில்லாது இவர்கள் பணியாற்றி வந்தார்கள் என்பதனை வரலாறு நமக்கு உறுதி செய்கின்றது.

ஆளுமையில் மட்டுமல்லாமல், ஆற்றிய பணியிலும் இருவரும் வேறுபட்டு இருந்



தார்கள்.

புனித பேதுரு திருச்சபையின் தலைவராக இருந்து, யூதர்கள் நடுவில் நற்செய்திப் பணியாற்றினார். தூய பவுலோ யூதர்களைக் கடந்து, புறவினத்தாருக்கு நற்செய்தி அறிவித்தார். தூய பவுல் ஆற்றிய பணிகள், மேற்கொண்ட பயணங்கள், எழுதிய நூல்கள் எல்லாம் இன்றைக்கும் நமக்கு ஆச்சரியத்தையும், வியப்பையும் தருகிறது.

இவர்கள் இருவரும் ஆளுமையில், ஆற்றிய பணியிலும் வேறுபட்டு இருந்தாலும் கிறிஸ்து இயேசுவில் ஒன்றுபட்டு இருந்தார்கள். இன்னொரு சிறப்பு என்னவென்றால் இருவருமே கி.பி. 67 ஆண்டில்தான் நீரோ மன்னனால் கொல்லப்பட்டார்கள். ஆகவே இவர்கள் இருவரது சாட்சிய வாழ்வும் நமக்கு சிறந்த பாடம்..

தூய பேதுருவும், பவுலும் பலவீனமானவர்களாக/ வலுவற்றவர்களாக இருந்தாலும், இறைவன் அவர்களை வலுவுள்ளவர்களாக, பலமுள்ளவர்களாக மாற்றுகின்றார்.

பேதுரு படிப்பறிவில்லாதவர், ஆண்டவர் இயேசுவையே தெரியாது என்று மறுதலித்தவர். அப்படியிருந்தாலும் இயேசு அவரைத் திருச்சபையின் தலைவராக ஏற்படுத்துகின்றார்.

தூய பவுலோ தொடக்கத்தில் திருச்சபையைத் துன்புறுத்தியவர். அவரையும் ஆண்டவர் இயேசு தன்னுடைய பணிக்காக தேர்ந்தெடுக்கின்றார். இவ்வாறு வலுவற்றவர்களில் இயேசு தன்னுடைய வல்லமையை சிறந்தோங்கச் செய்கிறார்.

2 கொரிந்தியர் 12:7,9 ஆகிய வசனங்களில், "எனக்கு அருளப்பட்ட ஒப்புயர்வற்ற வெளிப்பாடுகளில் நான் இறுமாப்பு அடையாதவாறு பெருங்குறை ஒன்று என் உடலில் தைத்த முள்போல் என்னை வருத்திக்கொண்டே இருக்கிறது. அது என்னைக் குத்திக் கொடுமைப்படுத்த சாத்தான் அனுப்பிய தூதனைப் போல் இருக்கிறது. நான் இறுமாப்படையாதிருக்கவே இவ்வாறு நடக்கிறது. அதை என்னிடமிருந்து நீக்கிவிடுமாறு மும்முறை ஆண்டவரிடம் வருந்தி வேண்டினேன். ஆனால், அவர் என்னிடம், "என் அருள் உனக்குப் போதும். வலுவின்மையில் தான் வல்லமை நிறைவாய் வெளிப்படும் என்கிறார் தூய பவுலடியார்.

தூய பவுலடியார் வலுவற்றவர். ஆனாலும் அவருடைய அந்த வலுவற்ற நிலையில் இறைவன் தன்னுடைய வல்லமையைப் பொழிந்து, தான் எல்லாம் வல்லவரென நிரூபித்துக் காட்டுகிறார்.

பேதுருவையும், அவரோடு இருந்தவர்களையும் தலைமைச் சங்கத்தார் நைய்யப்புடைத்து, ஆண்டவர் இயேசுவை இனிமேல் அறிவிக்கக்கூடாது என்று சொன்னபோதும் அவர் கிறிஸ்தவைப் பற்றிய நற்செய்தியை எல்லா மக்களுக்கும் அறிவிக்கத் தவறவில்லை. அதேபோன்று பவுலும் மக்களிடமிருந்து, ஆட்சியாளர்களிடமிருந்து பல்வேறு எதிர்ப்புக்களைச் சம்பாதித்தபோதும் கிறிஸ்துவுக்காக தன்னுடைய உயிரையும் தர முன்வருகின்றார். இவ்வாறு அவர்கள் தங்களுடைய கொள்கையில் உறுதியாக இருந்தார்கள்.

இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றி வாழும் நாம் நமது கொள்கையில் மிக உறுதியாக இருகின்றோமா? என சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

சில ஆண்டுகளுக்கு முன்பாக பிலடெல்பியா என்ற நகரத்தில் ஜெரார்டு என்ற கோடிஸ்வரர் வாழ்ந்துவந்தார். அவருக்குக் கீழ் ஏராளமான பணியாளர்கள் வேலை பார்த்து வந்தார்கள். ஒரு சனிக்கிழமை அன்று அவர் தன்னுடைய பணியாளர்களிடம், "நாளை (ஞாயிற்றுக்கிழமை) காலை, நம்முடைய நிறுவனத்திற்கு வெளியூரிலிருந்து பொருட்கள் வருகின்றன. ஆதலால் பணியாளர்கள் யாரும் விடுமுறை எடுக்காமல் தவறாது வரவேண்டும்" என்று உத்தரவிட்டார்.

அப்போது பணியாளர்களில் இருந்து ஒருவர் எழுந்து, "நாளை ஞாயிற்றுக்கிழமை, கடன் திருநாள். கோவிலுக்குச் செல்ல வேண்டும். அதனால் என்னால் வேலைக்கு வரமுடியாது" என்றார். இதைக் கேட்டுக் கொண்டிருந்த ஜெரார்டுக்கு கோபம்தாங்கமுடியவில்லை. உடனே அவர் அந்தப் பணியாளரிடம், "உன்னை நான் இப்போதே வேலையிலிருந்து நீக்குகின்றேன். அதனால் காசாளரிடம் சென்று, உனக்கான தொகையை வாங்கிக்கொண்டு அப்படியே போய்விடு" என்று சத்தம் போட்டார்.

அந்தப் பணியாளர் எதைக்குறித்தும் கவலைப்படாமல் தனக்குரிய பணத்தை வாங்கிக்கொண்டு வெளியே கிளம்பினார்.

இது நடந்து சில மாதங்களுக்குப் பிறகு ஒரு வங்கி மேலாளர் ஜெரார்டை அணுகி, "என்னுடைய வங்கியில் பணிபுரிய ஒரு நேர்மையான மனிதர் வேண்டும். உமக்குத் தெரிந்து அப்படி யாராவது நேர்மையான மனிதர் இருக்கிறாரா?" என்று கேட்டார். அதற்கு ஜெரார்டு, தன்னுடைய நிறுவனத்திலிருந்து நீக்கியவரைப் பரிந்துரைத்தார். ஏனென்றால் அவர் நிர்வாகம் சொன்னதைக் கேட்காவிட்டாலும், ஞாயிற்றுக்கிழமையில் வேலைக்குப் போகக்கூடாது என்ற கொள்கையில் உறுதியாக இருந்தால், அவருக்கு அந்த வேலையைப் பரிந்துரைத்தார்.

எல்.எஸ்




# மயூரா பிளேஸ் புனித அந்தோனியார் ஆலய திருவிழா









கொழும்பு மயூரா பிளேஸ் புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. திருவிழாவுக்கு முன்னோடியாக சனிக்கிழமை இரவு ணஇடம்பெற்ற வெஸ்பர்ஸ் ஆராதனை மற்றும் வழிபாடுகளை படங்களில் காணலாம். பங்குத்தந்தை நிஹால் ஐவன் அடிகளாரின் தலைமையில் அருட்தந்தையர்களான சமன் மெக்ஸிமஸ், டிலான், ரொய்ஸ்டன் ஆகியோர் வழிபாடுகளை மேற்கொண்டனர். (பட உதவி: ரூபன் ஏன்ஸ்டன்)

# இலட்சியத்தை சுமந்து செல்லும் பாதை

உண்மைக்காக, இலட்சியத்திற்காக, உயர்ந்த நோக்கத்திற்காக உழைக்கும் எந்தவொரு மனிதரும் கொடிய மரணத்தைச் சந்தித்தாக வேண்டும்,

இயேசுவின் துணிச்சல்மிகு செயல்பாடுகள் யாவும் அவர் கூறிய ஆன்மாவைக் கொல்ல இயலாமல். உடலை மட்டும் கொல்பவர்களுக்கு அஞ்சவேண்டாம். ஆன்மாவையும் உடலையும் நரகத்தில் அழிக்க வல்லவருக்கே அஞ்சுங்கள்" என்ற வார்த்தைகளுக்குச் சான்று பகர்கின்றன.

இதற்கு மூன்று நிகழ்வுகளை குறிப்பிட முடியும்.முதலாவதாக, எருசலேம் ஆலயத்தை தூய்மைப்படுத்தும் நிகழ்வு. கோவிலில் ஆடு, மாடு, புறா விற்போரையும் அங்கே உட்கார்ந்திருந்த நாணயம் மாற்றுவோரையும் அவர் கண்டார்; கயிறுகளால் ஒரு சாட்டை பின்னி அவர்கள் எல்லோரையும் கோவிலிலிருந்து துரத்தினார்; ஆடுமாடுகளையும் விரட்டினார்; நாணயம் மாற்றுவோரின் சில்லறைக் காசுகளைக் கொட்டிவிட்டு மேசைகளையும் கவிழ்த்துப்போட்டார். அவர் புறா விற்பவர்களிடம், "இவற்றை இங்கிருந்து எடுத்துச் செல்லுங்கள்; என் தந்தையின் இல்லத்தைச் சந்தையாக்காதீர்கள்" (யோவா 2:1416) என்றார்.

**இரண்டாவதாக, இயேசு, எருசலேமுக்காகப் புலம்பும் நிகழ்வவைக் காணமுடியும்**

அந்நேரத்தில் பரிசேயர் சிலர் இயேசுவிடம் வந்து, "இங்கிருந்து போய்விடும்; ஏனெனில், ஏரோது உம்மைக் கொல்ல வேண்டும் என்றிருக்கிறான்" என்று கூறினர். அதற்கு இயேசு, "இன்றும் நாளையும் பேய்களை ஓட்டுவேன்; பிணிகளைப் போக்குவேன்; மூன்றாம் நாளில் என்பணி நிறைவுபெறும் என நீங்கள் போய் அந்த நரியிடம் கூறுங்கள். இன்றும் நாளையும் அதற்கடுத்த நாளும் நான் தொடர்ந்து சென்றாக வேண்டும்" (13:3133) என்கின்றார்.

மூன்றாவதாக, இயேசு தனது இலட்சிய மரணத்தை ஏற்கும் வகையில் மூன்று முறை தமது மரணத்தை அறிவிக்கின்றார். "மானிடமகன் பலவாறு துன்பப்படவும் மூப்பர்கள், தலைமைக் குருக்கள், மறைநூல் அறிஞர்கள் ஆகியோரால் உதறித் தள்ளப்பட்டுக் கொலை செய்யப்படவும் மூன்று நாள்களுக்குப்பின் உயிர்த்தெழவும் வேண்டும்" என்று இயேசு அவர்களுக்குக் கற்பிக்கத் தொடங்கினார்

(மாற் 8:31). அந்த வகையில் நாம் நினைவுகூரும் இந்த மூன்று நிகழ்வுகளும், யாருக்கு அஞ்சவேண்டும் யாருக்கு அஞ்சக்கூடாது என்பதை நமக்குத் தெளிவுபடுத்துகிறது.

**எருசலேம் ஆலயத்தைத் தூய்மைப்படுத்தும் இயேசு**



இயேசுவின் வழியில் எல்லா நிலைகளிலும் துயரங்களையும் சாவினையும் ஏற்ற இறைவாக்கினரான எரேமியாவின் இலட்சிய வாழ்வு நமக்குச் சுட்டிக்காட்டப்படுகிறது. இறைதந்தையின் இறைவாக்குப் பணிகளை அவர் ஏற்றுக் கொண்டபோது அவர் அனுபவித்த துயரங்களையும் கொடிய வேதனைகளையும் எடுத்துக்காட்டுகின்றார்

**எரேமியா.**

முதலாவதாக, அவர் கூறும் வார்த்தைகளில் உடலை மட்டுமே கொல்லக்கூடிய மனிதர்களின் செயல்பாடுகளை எடுத்துரைக்கின்றார். இரண்டாவதாக, "ஆண்டவர் வலிமை வாய்ந்த வீரரைப் போல என்னோடு இருக்கின்றார். எனவே, என்னைத் துன்புறுத்துவோர் இடறி விழுவர். அவர்கள் வெற்றிகொள்ள மாட்டார்கள். அவர்கள் விவேகத்தோடு செயல்படவில்லை; அவர்களின் அவமானம் என்றும் நிலைத்திருக்கும்; அது மறக்கப்படாது" என்ற வார்த்தைகளில் ஆன்மாவைக் கொல்ல முடியாதவர்களாய் உடலை மட்டுமே கொல்லும் அம்மனிதர் மடிந்துவிடுவர் என்றும், நிலைவாழ்வுக்குத் தன் ஆன்மாவைக் காப்பாற்றும் இறைவன் உடனிருக்கின்றார் என்றும் எடுத்துரைக்கின்றார்.

எரேமியாவும் இயேசுவும் இறை தந்தைக்கு அதாவது ஆன்மாவைக் கொல்லும் வல்லமைபடைத்தவருக்கே தங்களை முற்றிலுமாகக் கையளித்தனர் என்பதை இதன் மூலம் நாம் அறிய முடிகிறது.

'சகோதரர்கள் எழுவரின் சான்று' என்ற தலைப்பில் இரண்டாம் மக்கபேயர் நூலில் சிறந்த நிகழ்வொன்று கூறப்படுகின்றது. சகோதரர்கள் எழுவரும் அவர்களுடைய தாயும் கைதுசெய்யப்பட்டு சாட்டைகளாலும் வார்களாலும் அடிக்கப்பட்டுச் சட்டத்துக்கு முரணாகப் பன்றி இறைச்சியை உண்ணும்படி மன்னனால் கட்டாயப்படுத்தப்படுகின்றனர். ஆனால், அவர்கள் எழுவரும் சிறிதும் அசைந்துகொடுக்கவில்லை. கடவுளுக்கு எதிரான இந்தக் கேடுகெட்ட செயலை ஒருபோதும் செய்யமாட்டோம் என்று உறுதியாக நிற்கின்றனர். எனவே, கோபவெறிகொள்ளும் அந்த அரசன் அந்தத் தாயின் கண்முன்பாகவே அவருடைய பிள்ளைகள் எழுவரையும் கொடூரமாகத் துடி துடிக்க வதைத்துக் கொல்கிறான்.

இதில் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய காரியம், அந்தத்தாயின் உறுதி கொண்ட மனமும் கடவுள்மீது வைத்திருக்கும் அவரின் அசைக்க முடியாத அவரது நம்பிக்கையும்தான்.

எல்லோருக்கும் மேலாக, அவர்களுடைய தாய் மிகவும் போற்றுதற்குரியவர், பெரும் புகழுக்குரியவர். ஒரே நாளில் தம் ஏழு மைந்தர்களும் கொல்லப்பட்டதை அவர் கண்டபோதிலும், ஆண்டவர்மீது கொண்டிருந்த நம்பிக்கையால் அவை அனைத்தையும் துணிவோடு தாங்கிக் கொண்டார்;

அவர்கள் ஒவ்வொருவருக்கும் தாய்மொழியில் அறிவுரை கூறினார்; பெருந்தன்மை நிறைந்தவராய்ப் பெண்ணுக்குரிய பண்பையும் ஆணுக்குரிய துணிவையும் இணைத்து அவர்களிடம், "நீங்கள் என் வயிற்றில் எவ்வாறு உருவானீர்கள் என நான் அறியேன்; உங்களுக்கு உயிரும் மூச்சும் அளித்ததும் நான் அல்ல; உங்களுடைய உள்ளுறுப்புகளை ஒன்றுசேர்த்ததும் நான் அல்ல.

உலகைப் படைத்தவரே மனித இனத்தை உருவாக்கியவர்; எல்லா பொருட்களையும் உண்டாக்கியவர்; அவரே தம் இரக்கத்தினால் உங்களுக்கு உயிரையும் மூச்சையும் மீண்டும் கொடுப்பார்; ஏனெனில் அவருடைய சட்டங்களை முன்னிட்டு நீங்கள் இப்போது உங்களையே பொருட்படுத்துவதில்லை" என்றார். (2 மக் 7:2023). இங்கே, "ஆன்மாவைக் கொல்ல இயலாமல். உடலை மட்டும் கொல்பவர்களுக்கு அஞ்சவேண்டாம். ஆன்மாவையும் உடலையும் நரகத்தில் அழிக்க வல்லவருக்கே அஞ்சுங்கள்" என்ற இயேசுவின் வார்த்தைகளுக்குச் சான்றாகி நிற்கின்றனர் அத்தாயும் அவரின் ஏழு மைந்தர்களும். இயேசுவின் இந்த வார்த்தைகளின் உண்மைப் பொருளை அவருடைய சீடர்கள் உயிர்ப்புக்கு முன்பு வரை புரிந்துகொள்ளவில்லை. ஆனால், உயிர்ப்புக்குப் பின்புதான் அதன்பொருளை நன்கு உணர்ந்துகொண்டனர். எனவேதான், "என்ன ஆனாலும் நாங்கள் கண்டதையும் கேட்டதையும் எடுத்துரைக்காமலிருக்க எங்களால் முடியாது" (திப 4:20) என்றார் புனித பேதுரு.

மேலும், "நாங்கள் எல்லாச் சூழ்நிலைகளிலும் இன்னலுற்றாலும் மனம் உடைந்து போவதில்லை; குழப்பமுற்றாலும் நம்பிக்கை இழப்பதில்லை; துன்புறுத்தப்பட்டாலும் கைவிடப்படுவதில்லை; வீழ்த்தப்பட்டாலும் அழிந்துபோவதில்லை. இயேசுவின் வாழ்வே எங்கள் உடலில் வெளிப்படுமாறு நாங்கள் எங்கு சென்றாலும் அவருடைய சாவுக்குரிய துன்பங்களை எங்கள் உடலில் சுமந்து செல்கிறோம். இயேசுவின் வாழ்வு சாவுக்குரிய எங்கள் உடலில் வெளிப்படுமாறு உயிரோடிருக்கும்போதே நாங்கள் அவரை முன்னிட்டு எந்நேரமும் சாவின் வாயிலில் நின்று கொண்டிருக்கிறோம்" (2 கொரி 4:811) என்ற புனித பவுலடியாரின் வார்த்தைகளும் இயேசுவின் வார்த்தைகளுக்குச் சான்றாக அமைகின்றன.

உயர்ந்த இலட்சியத்துடன் வாழ்ந்தவர்களும், வாழ்ந்துகொண்டு இருப்பவர்களும் நமக்குச் சொல்வது, 'உங்கள் உயிர்கள் பறிக்கப்படலாம், ஆனால், உங்களின் இலட்சியத்தை ஒருபோதும் சிதைக்க முடியாது' என்பதுதான். ஆகவே, இலட்சியத்தை சுமந்து செல்லும் பாதையில் உடலை மட்டுமே கொல்பவர்களுக்கு அஞ்சாமல், ஆன்மாவையும் உடலையும் நரகத்தில் அழிக்க வல்ல கடவுள் ஒருவருக்கே அஞ்சி நமது பயணத்தைக் துணிவுடன் தொடர்வோம். அதற்கான அருள்வரங்களுக்காக மன்றாடுவோம்.

அருட்பணி சூசை மாணிக்கம்...

# அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் 73 ஆவது வருடாந்த தேசிய மாநாடு

அகில இலங்கை வை.எம்.எம். ஏ. பேரவையின் 73 ஆவது வருடாந்த தேசிய மாநாடு 24.06.2023 பதுளை கெப்பிட்டல் சிட்டி ஹோட்டலில் தேசிய தலைவர் இஹ்சான் ஏ. ஹமீட் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, கௌரவ அதிதியாக ஊவா மாகாண ஆளுநர் எம். ஜே.எம். முஸம்மில், சிறப்பு விருந்தினராக பங்களாதேஷ் நாட்டின் உயர்ஸ்தானிகர் தாரிக் எம்டி ஆரிபுல் இஸ்லாம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதில் இவ்வாண்டுக்கான வை. எம். எம்.ஏ இன் விசேட ஆளுமைகளுக்கான விருது கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைகள் பிரிவின் பொறுப்பாளர் மேஜர் என். டி நசுமுதீன், காலி கூட்டுறவு சங்க இருதய வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் அஹ்மட் ரிஸ்கான் ஆகிய இருவர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் அகில இலங்கை மட்டத்தில் தொண்டுப் பணியாற்றி சிறந்த கிளைச் சங்கங்கங்களுக்கும் சிறந்த மற்றும் மாவட்டப் பணிப்பாளர்களுக்கு விசேட விருதுகள் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன. அத்துடன் இம்மாநாடு தொடர்பில் சிறந்த வழிகாட்டல் ஆலோசனை வழங்கியமைக்கான விருது முன்னாள் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவரும் தேசிய விவகாரங்களுக்குப் பொறுப்பாளருமான சஹீட் எம். ரிஸ்மிக்கு வழங்கி வைக்கப்பட்டன.

**துறைமுகங்கள் கப்பல்றை மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா உரையாற்றும் போது**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வீழ்ச்சியுற்ற நாட்டை மீளவும் கட்டியெழுப்புகின்ற முயற்சிகளுக்கு முஸ்லிம் இளைஞர்களது பங்களிப்பு மிக அவசியமாகும். முஸ்லிம் இளைஞர் சமூகம் இந்த நாட்டின் தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு பாரிய பங்களிப்பை ஆற்றியுள்ள அதேவேளை தற்காலத்தில் கல்வி மேம்பாட்டுக்காக பாரிய பங்களிப்பை ஆற்றி வருகின்றனர்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் முஸ்லிம் மக்கள் எங்களுக்கு முன்மாதரி மிக்கவர்களாக வாழ்ந்து வருகின்றனர். உங்களை எங்களில் ஒருவராகவே நாங்கள் மதிக்கின்றோம். அதே போன்று முஸ்லிம் மக்கள் மூலம் வர்த்தக ரீதியான நடவடிக்கைகளின் போது இந்நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு வலுசேர்ப்பவர்களாக இருந்து வருகிறார்கள். நாங்கள் அதற்காக மிகவும் பெருமைப்படுகின்றேன்.

முஸ்லிம் மக்கள் வர்த்தக தொழில் துறைசார்ந்தவர்கள் என்ற எண்ணக்கரு மாற்றம் பெற்று இன்று அறிவு ரீதியிலான பாரிய பங்களிப்பை வழங்கி வருகின்றனர். சட்டத்துறை,கல்வித்துறை, வைத்தியத் துறை என்று எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்குகின்றனர்.இது இன்னும் அதிகம் அதிகம் இளைஞர்கள் அறிவியல் ரீதியாக அதிகரிக்கப்பட வேண்டும். அவர்களுக்காக அறிவியல் ரீதியாக கல்வி ரீதியாக சந்தர்ப்பம் வழங்கப்படுதல் வேண்டும். முஸ்லிம் பெண் பாடசாலை ஒன்றை இந்த மாவட்டத்தில் உருவாக்கியுள்ளேன் என்ற அடிப்படையில் நான் பெருமைப்படுகின்றேன். அல் அதான் மகா வித்தியாலயத்திற்கு இடைக்கிடையே என்னுடைய பங்களிப்பை நல்கி வருகின்றேன். அப்பாடசாலைக்குத் தேவையான பௌதீக வளங்களை பெற்றுக் கொடுத்து வருகின்றேன்.

ஒரு நிலையான பயணத்திற்கு இந்நாட்டில் வாழும் முஸ்லிம் இளைஞர்களுடைய நம்பிக்கையினை மேலும் வெற்றிகொள்பவராக இருத்தல் வேண்டும். விசேடமாக அரசியலுக்குள் சமய ரீதியிலான பிளவுகளை ஏற்படுத்துவதைவிட அவற்றை ஒருமுகப்படுத்தி அரசியல் பயணத்தை மேற்கொள்ளுகின்ற நிலையில் முஸ்லிம் மக்களும் முன்வருதல் வேண்டும்.

அரசியல் கட்சிகள் தங்களுடைய சமூகம் சமயத்திற்காக உருவாக்கப்படுவதில்லை. தங்களுடைய கொள்கை வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்காக உருவாக்கப்படுவதாகும். இந்நாடு பொருளாதார நெருக்கடியால் வீழ்ச்சியுற்ற நிலையில் இருந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் முன்னெடுக்கப்படும் சவால்களுக்கு உங்களது பங்களிப்பு அவசியமாகும். நாட்டைக் கட்டி எழுப்புகின்ற பங்களிப்பு மிக அவசியம் ஆகும். அதுதான் உண்மையான உள்ளார்ந்த பங்களிப்பாக அமையும்.

நான் சமீபத்தில் பங்களாதேஷ் நாட்டுக்கு விஜயம் செய்தேன். அங்கு கடற்துறை அமைச்சருடன் இந்து கடல் சமுத்திரம் தொடர்பில் கலந்துரையாடி பின்னர் நாட்டின் பிரதமர் சேஹ் ஹசீனாவை நேரில் சந்தித்து உரையாடக் கிடைத்தது. இதன் மூலம் இலங்கை பங்களாதேஷ் இரு நாடுகளுடைக்கிலான நட்புரீதியிலான உறவு மேலும் வலுப்பெறவுள்ளமை முக்கிய அம்சமாகும்.

**பங்களாதேஷ் நாட்டின் உயர்ஸ்தானிகர் தாரிக் எம்.டி ஆரிபுல் இஸ்லாம் உரையாற்றும் போது.....**

இலங்கையின் அண்டைய நாடான பங்களாதேஷ் மிக நட்புக்குரிய நாடு என்பதை நாம் எல்லோரும் அறிவோம். அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா சமீபத்தில் பங்களாதேஷ் நாட்டுக்கு விஜயம் செய்து கப்பல் போக்குவரத்து மற்றும் இரு நாடுகளுக்கிடையிலான பல விடயங்கள் பற்றி பரஸ்பரம் கலந்துரையாடினார். இந்த உறவை நாங்கள் சிறப்பாகப் பயன்படுத்த வேண்டும்.

எங்களுக்கிடையிலே சமய ரீதியிலான ஒற்றுமையும் மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் காணப்படுகின்றது. எமது இரு நாடுகளுகளில் வாழும் முஸ்லிம், சிங்கள, கிறிஸ்தவ, மற்றும் இந்து மக்களுக்கிடையே ஒற்றுமை மிகவும் வலுவானதாகக் காணப்படுகின்றது.

இலங்கையர்கள் நிறையப்பேர் பங்களாதேஷில் வேலை செய்கிறார்கள். அதேபோல் இரு நாடுகளுக்கிடையிலான வர்த்தக உறவும் சிறந்த முறையில் பேணப்படுகின்றன. இரு நாடுகளின் நம்பிக்கையின் அடிப்படையில் சமூகங்களுக்கு இடையிலான உறவு மிக மிக வலுவானது. புனித இஸ்லாமிய மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இஸ்லாமிய சகோதர சகோதரிகள் பங்களாதேஷ் நாட்டுக்கு வருகை தருகின்றார்கள். அதேபோல் பங்களாதேஷ் இளம் பௌத்த பிக்குகள் பௌத்த சமயத்தை இலங்கையில் கற்கின்றார்கள் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளலாம். அதே போன்று கிறிஸ்தவ, இந்து சமயத்தவர்களுடன் மிக நெருக்கமான உறவைப் பேணி வருகின்றோம். 2007 ஆம் ஆண்டு புத்தரின் தலைமுடியை தானமாக வழங்கினோம். அதற்குப் பகரமாக இலங்கை அரசு 30 பௌத்த சிலைகளைத் தானமாக வழங்கியது. எனவே இரு நாடுகளுக்கிடையிலான உறவு மிகவும் பலம் வாய்ந்தவையாகும்.

பங்களாதேஷ் முஸ்லிம்களைப் பெரும்பான்மையாக கொண்ட நாடாக இருந்தாலும் பெருமைமிக்க பெரிய நாடு என்ற வகையிலும் மதப் பன்முகத் தன்மை வாய்ந்த நாடு என்ற வகையிலும் நாங்கள் பெருமிதம் அடைகின்றோம். அங்கு வாழும் அனைத்து மதத்தைச் சார்ந்த மக்களும் தத்தமது சமயங்களை சுதந்திரமாக கடைப்பிடிக்க முடியும்.

முஸ்லிம் சமூகத்திற்கு மட்டுமல்ல, முழு நாட்டிற்கும் அகில இலங்கை வை. எம். எம். ஏ பேரவை ஆற்றி வரும் மிகச் சிறந்த பணிகளை கண்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். முஸ்லிம்கள் வணிகத் துறையில் மிகவும் திறன்மிக்கவர்கள் சிறந்து விளங்குகின்றார்கள், எனவே அவர்கள் நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்காகவும் மற்றும் மீட்சிக்கு மிகச் சிறந்த பங்களிப்பை வழங்குகிறார்கள். அவர்களுடைய இந்தப் பணிகளுக்கு எனது முழுமையான ஆதரவை வழங்கவுள்ளேன் என்பதை உறுதியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

| **வரிக்கு முன் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து நிகர காசு பாய்ச்சல்** | **(7,974)** | **4,733** | | |
| செலுத்திய வருமான வரி | (717) | (418) | (6,414) | (7,481) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளில் (பயன்படுத்திய/இருந்தான) நிகர பணம்** | **(8,691)** | **4,315** | **(156,194)** | **56,257** |
| **முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப்பாய்ச்சல்** | - | - | | |
| காணி, இயந்திர மற்றும் உபகரணக் கொள்வனவு | - | 2 | (5,822) | (549) |
| காணி, இயந்திர மற்றும் உபகரண விற்பனை மூலமான வருமானம் | (0) | - | 227 | 69 |
| நிதி முதலீடுகளின் கொள்வனவு | 1,695 | 39,263 | - | - |
| நிதி முதலீடுகளின் விற்பனை மற்றும் முதிர்ச்சி மூலமான வருமானம் | - | - | - | - |
| அருவச் சொத்துக்களின் நிகர கொள்வனவு | - | | - | - |
| உப நிறுவனங்கள் கூட்டு முயற்சிகள் மற்றும் துணை நிறுவனங்களிலுள்ள முதலீடுகளின் சுவீகரிப்பு மூலமான நிகர காசுப்பாய்ச்சல் | - | | - | - |
| உப நிறுவனங்கள் கூட்டு முயற்சிகள் மற்றும் துணை நிறுவனங்களிலுள்ள முதலீடுகளின் விற்பனை மூலமான நிகர காசுப் பாய்ச்சல் | - | - | - | - |
| உப நிறுவனங்கள் மற்றும் துணை நிறுவனங்களிலிருந்து கிடைத்த பங்கிலாபங்கள் | 2 | 2 | - | - |
| ஏனையவை | - | - | - | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்திய/இருந்தான நிகர பணம்** | **1,697** | **39,267** | **(5,595)** | **(480)** |
| **நிதி நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்கள்** | - | - | - | - |
| சாதாரண பங்கு மூலதன வழங்கல் மூலமான நிகர வருமானம் | - | - | - | - |
| கீழ்நிலைப்படுத்திய கடன் வழங்கல் மூலமான நிகர வருமானம் | - | - | - | - |
| கீழ்நிலைப்படுத்திய கடனின் மீளளிப்பு | - | - | - | - |
| கீழ்நிலைப்படுத்திய கடன் மீது செலுத்தப்பட்ட வட்டி | - | - | - | - |
| கட்டுப்படுத்தும் ஈடுபாட்டை வைத்திராதவர்களுக்குச் செலுத்தப்பட்ட பங்கிலாபம் | - | - | (1,873) | (1,860) |
| தாய்நிறுவனத்தின் பங்குதாரர்களுக்குச் செலுத்தப்பட்ட பங்கிலாபம் | - | - | - | - |
| ஏனைய பங்குரிமைப் பத்திரகளை வைத்திருப்பவர்களுக்குச் செலுத்தப்பட்ட பங்கிலாபம் | - | - | - | - |
| தலைமை அலுவலகத்திற்கு மாற்றப்பட்ட இலாபம் | - | - | - | - |
| ஏனையவை | (9) | (40,800) | 2,000 | 6,650 |
| **நிதி வடவடிக்ரககளில் (பயன்படுத்திய/இருந்தான நிகர பணம்)** | **(9)** | **(40,800)** | **127** | **4,790** |
| **காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் தொடர்பில் பரிவர்த்தனை வித்தியாசம்** | **(7003)** | **2,782** | **(161,662)** | **59,969** |
| காலப்பகுதியின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்குச் சமசமானவைகள் | 7,538 | 2,864 | 367,732 | 307,763 |
| பரிமாற்ற மாற்றங்களால் ஏற்பட்ட காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | 723 | 1,892 | - | - |
| காலப்பகுதியின் முடிவில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | **1,259** | **7,538** | **206,070** | **367,732** |

## 31.03.2023 இல் முடிவடைந்த ஆண்டுக்குரிய பங்கு மூலதன மாற்றங்களின் கூற்று

| குழுமம் (in INR) ரூபா மில்லியன்களில் | கூறப்பட்ட மூலதனம் / ஒதுக்கப்பட்ட மூலதனம்: வாக்குரிமையுள்ள சாதாரண பங்குகள் | வாக்குரிமையற்ற சாதாரண பங்குகள் | ஒதுக்கப்பட்ட மூலதனம் | ஒதுக்கங்கள்: ஒதுக்கு நிதியம் | OCI ஒதுக்கம் | மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | பிடித்துவைக்கப்பட்ட வருவாய்கள் | ஏனைய ஒதுக்குகள் | மொத்தம் | கட்டுப்படுத்த முடியாத வட்டி | மொத்த பங்கு மூலதனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **01.04.2022** அன்று மீதி (ஆரம்ப மீதி) | 189,024 | - | - | 35,620 | - | 27,496 | (179,994) | 157,858 | 230,004 | - | 230,004 |
| ஆண்டுக்கான அனைத்தையுமுள்ளடக்கிய மொத்த வருமானம் | | | | | | | | | | | |
| ஆண்டுக்கான இலாபம் (நட்டம்) | - | - | - | - | - | - | 20,988 | - | 20,988 | - | 20,988 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம் (வரி நீங்கலாக) | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| **ஆண்டுக்கான அனைத்தையுமுள்ளடக்கிய மொத்த வருமானம்** | 189,024 | - | - | 35,620 | - | 27,496 | (159,006) | 157,858 | 250,992 | - | 250,992 |
| **பங்கு மூலதன உரிமையாளர்களுடனான பங்கு மூலதனத்துடன் நேரடியாக இனங்காணப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள்** | | | | | | | | | | | |
| வழங்கிய பங்கு/ ஒதுக்கப்பட்ட மூலதனத்தில் அதிகரிப்பு | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| பங்கு விருப்பார்வங்கள் செயற்படுத்தப்பட்டமை | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| மிகை இலாப வழங்கல் | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| உரிமை வழங்கல் | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| காலப்பகுதியில் ஒதுக்கங்களுக்கு மாற்றப்பட்டவை | - | - | - | 5,247 | - | - | - | 1,862 | 7,109 | - | 7,109 |
| பங்கு மூலதன உரிமையாளர்களுக்கான பங்கிலாபம் | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| தலைமை காரியாலயத்திற்கு மாற்றப்பட்ட இலாபம் | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீள்மதிப்பீட்டு இலாபம்/(நட்டம்) (செலவு முறை கடைப்பிடிக்கப்பட்டிருப்பின்) | - | - | - | - | - | 439 | - | - | 439 | - | 439 |
| ஏனையவை (தயவுசெய்து குறிப்பிடவும்) | - | - | - | - | - | (403) | (5,482) | (26) | (5,911) | - | (5,911) |
| பங்கு மூலதன உரிமையாளர்களுடனான மொத்தக் கொடுக்கல்வாங்கல்கள் | - | - | - | 5,247 | - | 36 | (5,482) | 1,836 | 1,637 | - | 1,637 |
| **31.03.2023 அன்று மீதி (இறுதி மீதி)** | 189,024 | - | - | 40,867 | - | 27,532 | (164,488) | 159,694 | 252,629 | - | 252,629 |

2015 ஜனவரி மாதத்திலிருந்து வங்கியானது புதிய மூலதனப் போதுமை கட்டமைப்பு முறைமையை (Basel III) பின்பற்றுகிறது. மேலும் ஒழுங்கமைப்பு வழிகாட்டல்களுக்கேற்ப கடன்சார் மூலதன அபாயத்தின் கணிப்பிற்காக நியமனப்படுத்தப்பட்ட அணுகுமுறை (SA), செயற்பாட்டு அபாயத்தின் கணிப்பிற்காக அடிப்படைச் சுட்டுதல் அணுகுமுறை (BIA), மற்றும் சந்தைப்படுத்தல் அபாயத்தின் கணிப்பிற்காக நியமனப்படுத்தப்பட்ட அளவீட்டு முறை (SMM) என்பவற்றை கடைப்பிடித்து வருகிறது. மேலும் மூன்றாவது கட்டதேவைகளை பூர்த்தி செய்வதற்காக வங்கியானது உள்ளக மூலதன போதுமை மதிப்பீட்டு செயற்பாட்டுக்கு (ICAAP) என சபையின் அனுமதியைப் பெற்ற கொள்கையை வங்கி நடைமுறையில் கொண்டுள்ளது. இந்த கொள்கை முதற்கட்ட அபாயங்களுக்கு மேலாகவும், கூடுதலாகவும் வங்கி எதிர்கொள்ளும் அனைத்து முக்கிய அபாயங்களையும் எதிர்கொள்ளும் வகையிலும் தற்போதுள்ள அடிப்படையில் தேவைகளை வழங்கும் மூலதன போதுமை கட்டமைப்பை எதிர்கொள்ளவும் அமைந்துள்ளது.

மேலும் அதிசிறந்த அபாய முகாமைத்துவ முறைகளையும் செயற்பாடுகளையும் வங்கி நடைமுறைப்படுத்துவதற்காக வங்கி வர்த்தகப்பிரிவுகளில் சார்ந்திராத சுயாதீனமான, அனைத்து வசதிகளையும் உடைய அபாய முகாமைத்துவப்பிரிவு வங்கியின் மத்திய அலுவலகத்தில் செயல்படுகின்றது. வங்கியின் பொது முகாமையாளர் தரத்தில் உள்ள ஒரு தலைமை அபாய முகாமைத்துவ உத்தியோகத்தர் இந்த பிரிவுக்கு பொறுப்பாக உள்ளார்.

**உறுதிப்படுத்தல்:**

இதன் கீழ் ஒப்பமிடும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் தலைமை நிறைவேற்று உத்தியோகத்தர் மற்றும் இணக்க உத்தியோகத்தர் ஆகிய நாங்கள் கூட்டாக உறுதிப்படுத்துவதாவது :-

அ) மேற்படி கூற்றுகள் இலங்கை மத்திய வங்கியால் அறிவுறுத்தப்பட்ட படிமுறைகள் மற்றும் வரைவிலக்கணங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டவை.

ஆ) இக்கூற்றுகள் வங்கியின் கணக்காய்வுக்குட்பட்டது என்று குறிப்பிடப்பட்டாலன்றி கணக்காய்வுக்குட்பட்ட கூற்றுகளிலிருந்து எடுக்கப்பட்ட தகவல்களை உள்ளடக்கியுள்ளன.

ஷமீர் . S
நாட்டுத் தலைமை
திகதி: 26.06.2023

RJW. N. சதுராணி
இணக்க உத்தியோகத்தர்
திகதி: 26.06.2023

**FACIILITIES OFFERED :** ◆INR INSTA REMIT ◆COMMERCIAL & TRADE FINANCE FACILITIES ◆LOCKER FACILITY & MANY MORE....

For further details please contact us on +94 11 5324422

* Trusted Marketplace of Classified Advertisers...

SUNDAY OBSERVER adz It's what you want

Classified

Green Light for Online Transfer

For 15 Words Rs. 800/-

(Additional each word Rs. 20/-)

BANK OF CEYLON BOC Lake House Branch Acc. No. 000000377

Call :- 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343

077 7 270 067 E-mail - classified@lakehouse.lk

# ஆர்வ வெளிப்பாட்டிற்கான வேண்டுகோள்

## (உசாத்துணை சேவைகள்)

## இலங்கை வானிலையியல் திணைக்களத்தின் நவீனமயமாக்கலுக்கான முறைமைகள் ஒருங்கிணைப்பிற்கான உசாத்துணை சேவைகள்

### SLMOI/CRES/DOM/C/QCBS/30

**இலங்கை அரசாங்கம்**
**காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சிநிரல் அணுகுமுறை (CResMPA)**
**கடனிலக்கம்: IBRD-89960**

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது உலக வங்கியிடமிருந்து காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சிநிரல் அணுகுமுறை ஆகுசெலவிற்காக கடனொன்றைப் பெற்றுள்ளதுடன் இந்நிதியத்தின் பாகமொன்றை வானிலையியல் திணைக்களத்தின் (DoM) நவீனமயமாக்கலுக்கான அனுசரணை வழங்குவதற்கான உசாத்துணை சேவைகளுக்காக செலவிட உத்தேசித்துள்ளது.

**பின்புலம்:**

வளிமண்டலவியல் திணைக்களம் இலங்கையில் வானிலை தொடர்பான ஆபத்துகள் மற்றும் சுனாமி தொடர்பான வானிலை மற்றும் காலநிலை சேவைகள் மற்றும் முன் எச்சரிக்கை தகவல் வழங்கும் கட்டாய தேசிய நிறுவனமாகும். DoM 1948 இல் நிறுவப்பட்டதுடன் மற்றும் நாட்டில் 1865 முதல் காலநிலை தரவுகளை தொகுத்து முறையாக நிர்வகித்து வருகிறது. உலக வானிலை அமைப்பு (WMO) மற்றும் சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பு (ICAO) ஆகியவற்றின் விதிமுறைகளைப் பின்பற்றி விவசாயம், நீர்ப்பாசனம், மின்சாரம் மற்றும் ஆற்றல், விமானப் போக்குவரத்து, கடல்சார் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைகளுக்கு DoM சேவைகளை வழங்குகின்றது. DoM vன்பது இலங்கைக்கான காலநிலை மாற்ற ஆய்வுகள் மற்றும் சுனாமி எச்சரிக்கைகளுக்கான மைய நிறுவனமாகும்.

தேசிய வானிலை ஆய்வு மையம் (NMC), காலநிலை, மழைப்பொழிவு, விவசாய வானிலை, ரேடார் மற்றும் ரேடியோசோன்ட் (Radiosonde), தரவு செயலாக்கம் மற்றும் காப்பகம், கருவிகள் மற்றும் நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள 22 பிராந்திய வானிலை அலுவலகங்கள் போன்ற தொழில்நுட்ப கிளைகளை உள்ளடக்கிய DoM தலைமையகம் கொழும்பில் அமைந்துள்ளது. DoM ஆனது கட்டுநாயக்க மற்றும் மத்தள சர்வதேச விமான நிலையங்களில் நிறுவப்பட்டுள்ள 2 விமான முன்னறிவிப்பு மையங்கள், பல விவசாய வானிலை நிலையங்கள் மற்றும் பிராந்திய மட்டத்தில் இயங்கும் மழை அளவீட்டு நிலையங்கள் மூலம் முழு நாட்டையும் உள்ளடக்கிய ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து சேவைகளை வழங்குகிறது. காலநிலை மாற்ற ஆய்வுகளுக்கான மையமும் DoM இன் கீழ் நிறுவப்பட்டுள்ளது.

வானிலை மற்றும் காலநிலை தொடர்பான சேவைகளில் சிறந்து விளங்கும் மையமாக DoM இன் பார்வை உள்ளது, அதே நேரத்தில் பணி அறிக்கையானது வானிலை, வானியல் வானிலை, கடல் வானிலை, நீர் வானிலை, வேளாண் வானிலை, காலநிலை மற்றும் வானியல் போன்ற சேவைகளை அரசு நிறுவனங்களுக்கு வழங்குவதாகும். தனியார் துறை மற்றும் முக்கியமாக பொது மக்கள் சர்வதேச தரத்தை பின்பற்றுவதன் மூலம் தேசிய தேவைகளை பேணுவதில் முக்கிய பங்கை வகிக்கின்றது.

DoM இல் போதுமான நவீன தொழில்நுட்பம், கண்காணிப்பு வலையமைப்புகளுக்கான மேம்பட்ட ICT உள்கட்டமைப்பு மற்றும் இலக்கு துறைகளுக்கு திறமையான மற்றும் பயனுள்ள சேவைகளை வழங்க போதுமான ஆதாரங்கள் இல்லை. தொடர்புடைய முகவராண்மைகளுக்கு போதுமான காலஅவகாசத்துடன் தற்காலிக மற்றும் இடஞ்சார்ந்த துல்லியமான முன்னறிவிப்புகளை வழங்குவதில் DoM தற்போது சிக்கல்களை எதிர்கொள்கிறது. இதன் விளைவாக, அடிக்கடி ஏற்படும் இயற்கை பேரழிவுகளால் பாதிக்கப்படக்கூடிய பல்வேறு சமூக-பொருளாதாரத் துறைகளில் உள்ள மக்களின் சொத்துக்கள் மற்றும் வாழ்க்கையைப் பாதுகாப்பதற்கான தாக்கம் சார்ந்த முன்னறிவிப்புகளை தயாரிப்பதில் பங்குதாரர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். கூடுதலாக, நாட்டின் பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டிற்காக அவர்களின் கட்டாய சேவைகளை மேற்கொள்ள வானிலை மற்றும் காலநிலை தொடர்பான தகவல்களை DoM வழங்குகிறது.

**ஆலோசனை சேவையின் நோக்கம்:**

தேசிய மற்றும் பிராந்திய சமூக-பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும், நாட்டில் காலநிலை தொடர்பான பேரழிவுகளின் அபாயத்தைக் குறைப்பதற்கும், நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் தற்போதைய வானிலை மற்றும் காலநிலை தொடர்பான சேவைகளை நவீனமயமாக்குவது அவசியம்.

DoM (வானிலை முன்னறிவிப்பு, Nowcasting, காலநிலை முன்னறிவிப்பு மற்றும் கண்காணிப்புத் தரவின் தரத்தின் உகந்த பாதுகாப்பை உறுதி செய்யும் முன்கூட்டிய எச்சரிக்கை) நவீனமயமாக்கலுக்கான சாலை வரைபடத்தை உருவாக்குவது, அடிக்கடி ஏற்படும் ஆபத்துக்களுக்கு சமூகத்தின் ஆபத்தையும் பாதிப்பையும் குறைக்கிறது.

**ஆலோசனை சேவைகள் ("சேவைகள்") இரண்டு கட்டங்களில் வழங்க வேண்டும்.**

**1. கட்டம் 1.**

அ. ஆலோசனை நிறுவனம், தற்போதுள்ள முழு கண்காணிப்பு வலையமைப்பு முன்னறிவிப்பு அமைப்பு, தொழில்நுட்ப உள்கட்டமைப்பு மற்றும் அதன் துல்லியம் ஆகியவற்றை முழுமையாக மதிப்பீடு செய்ய வேண்டும். அவர்கள் தற்போதுள்ள திறன்-கட்டமைப்பு திட்டங்களையும் மதிப்பீடு செய்து அவற்றின் இடைவெளிகளை மதிப்பிட வேண்டும்.

ஆ எதிர்பார்க்கப்படும் அளவைப் பூர்த்தி செய்வதற்காக, கண்டறியப்பட்ட இடைவெளிகளை மேம்படுத்துவதற்கான ஆலோசனையை ஆலோசனை நிறுவனம் சமர்ப்பிக்க வேண்டும்.

இ. ஆலோசனை நிறுவனம் தற்போதுள்ள அமைப்பை மதிப்பீடு செய்து, நீர்ப்பாசனத் துறை (ID),

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் (NBRO), பேரிடர் மேலாண்மை மையம் (DMC) மற்றும் இலங்கை போன்ற வரிசை முகவராண்மைகளிடையே மேம்படுத்தப்பட்ட பொதுவான தரவு மற்றும் தகவல் பகிர்வு முறைமை மற்றும் வளர்ச்சிக் கழகம் (SLLDC) ஆகியவற்றை நிறுவுவதற்கு உதவ வேண்டும்.

**ஆலோசனை சேவையின் 01 ஆம் கட்டத்திற்கு எதிர்பார்க்கப்படும் காலம் 6 மாதங்கள்.**
**2. கட்டம் 2**

அ. அடிப்படை மதிப்பீடுகள், தரவுக் கொள்கை உட்பட சட்ட மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்பை வலுப்படுத்துதல் ஆகியவற்றிற்கு ஆலோசனை நிறுவனம் பொறுப்பாகும்.

ஆ. விரிவான மற்றும் நம்பகமான ஒருங்கிணைந்த அமைப்பின் வளர்ச்சி தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் உள்ளடக்கிய கொள்முதல் திட்டத்தை ஆலோசனை நிறுவனம் தயாரிக்க வேண்டும். வாங்கப்பட்ட அல்லது ஏற்கனவே கிடைக்கக்கூடிய வெவ்வேறு அமைப்புகள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருப்பதை உறுதி செய்வதாகும். ஒருங்கிணைப்பு திட்டத்தின் முக்கிய காரணியாக இருப்பதால், ஆலோசனை நிறுவனம் மிகவும் கவனமாக மதிப்பாய்வு செய்து செயற்படுத்தப்பட வேண்டிய அமைப்பின் கட்டுப்பாட்டை உறுதி செய்ய வேண்டும். எனவே, செலவுகளைக் குறைப்பதற்காக ஒரு புதிய அமைப்பை உருவாக்குவதற்குப் பதிலாக கிடைக்கக்கூடிய நம்பகமான திறமையான தயாரிப்புகளைப் பார்ப்பது நிறுவனத்தின் பொறுப்பாகும். நிறுவல், செயற்பாடு/பராமரிப்பு தொடர்பான பயிற்சி, ஒருங்கிணைந்த முன்கணிப்பு அமைப்பு (NWP மாதிரிகள், காலநிலை மாதிரிகள், நிகழ்நேர அவதானிப்புகள் மற்றும் பல. உட்பட) மற்றும் முன்னறிவிப்பு சரிபார்ப்பு அமைப்பு உட்பட திட்டத்தை செயற்படுத்துவதில் DoM க்கு ஆலோசனை நிறுவனம் உதவும்.

இ. ஆலோசனை நிறுவனம் நிலையான உலக வங்கி வடிவத்தில் கேள்வி ஆவணங்களை தயாரிப்பதில் DoM இற்கு உதவும்.

ஈ. ஆலோசனை நிறுவனம் ஒப்பந்த நிர்வாகத்தில் DoM இற்கு உதவும் இதில் ஏல விதிமுறைகளின் அனைத்து அம்சங்களிலும் அனுசரணை மற்றும் முன்மொழிவுகளை நிறைவேற்றுவதற்கான கோரிக்கை ஆகியவையும் அடங்கும்.

**ஆலோசனை சேவையின் 02 ஆம் கட்டத்திற்கு எதிர்பார்க்கப்படும் காலம் 33 மாதங்கள்.**

கட்டம் 1 மற்றும் 2 ஆகிய இரண்டின் நோக்கம் குறிப்பு விதிமுறைகளில் (TOR) விரிவாக வழங்கப்பட்டுள்ளது, இதனை மின்னஞ்சல் முகவரிக்கான கோரிக்கையின் பேரில் பெறலாம்: **pdcresmpa@gmail.com**

காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சிநிரல் அணுகுமுறையானது இச்சேவைகளை வழங்குவதற்காக தகுதியுள்ள உசாத்துணை நிறுவனங்களை அவர்களின் ஆர்வத்தை வெளிப்படுத்துமாறு இப்போது அழைக்கின்றது. ஆர்வமுள்ள உசாத்துணை நிறுவனமானது சேவைகளை செயற்படுத்துவதற்கான தேவைப்படும் தகைமைகள் மற்றும் உரித்தான அனுபவத்தைக் கொண்டுள்ளார்களென காட்சிப்படுத்தும் தகவலை வழங்கல் வேண்டும். தெரிவு செய்வதற்கான தகவுத்திறன் பின்வருமாறு.

அ. குறிப்பு விதிமுறைகளில் விபரிக்கப்பட்டவாறு அனைத்து அம்சங்களிலும் விரிவான முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப அறிவு.

ஆ. நிரூபிக்கப்பட்ட அனுபவத்துடன் தகைமையுள்ள நிரந்தரமான முக்கிய பதவி நிலையினரின் எண்ணிக்கை.

இ. நிதியிடல் திடநிலை: கடந்த ஐந்து வருடங்களில் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியிடல் அறிக்கைகளை சமர்ப்பிப்பதன் மூலம் சிறந்த நிதி நிலைமை மற்றும் ஆற்றல் உள்ளன என்பதை உசாத்துணை நிறுவனமானது காட்சிப்படுத்தல் வேண்டும்.

ஈ. இதே போன்ற இயல்வு ஒதுக்கீட்டில் குறிப்பிட்ட சமீபத்திய அனுபவம், குறிப்பாக ஒருங்கிணைந்த முன்கணிப்பு அமைப்புக்களின் வடிவமைப்பில் - சேவை நாடுபவரின் பெயர், இடம், செயற்படுத்தும் காலம் மற்றும் மதிப்பு உள்ளிட்ட சுருக்கமான விளக்கத்தால் சான்றுபடுத்தப்படும் கடந்த பத்து ஆண்டுகளில் பூர்த்தி செய்யப்பட்ட தொடர்புடைய ஒப்பந்தங்களின் பட்டியல்.

உ. முந்தைய வாடிக்கையாளர்களின் குறிப்பு.

ஊ. ஆலோசனை நிறுவனம் குறைந்தபட்சம் 05 வருடங்கள் வானிலை ஒழுங்கு முறையுடன் தொடர்புடைய வணிகத்தில் இருத்தல் வேண்டும். கம்பனிப் பதிவு பதிவு செய்யப்பட்ட இடம் மற்றும் பதிவுத் திகதி, சட்டரீதியிலான தகுதி உள்ளிட்டவைகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

உலக வங்கியின் நலன்களின் முரண்பாடு குறித்த கொள்கையை முன்வைத்து, ஆர்வமுள்ள ஆலோசனை நிறுவனங்களின் கவனத்தை உலக வங்கியின் '' IPF கடன் வாங்குபவர்களுக்கான கொள்முதல் விதிமுறைகள்'' நான்காவது பதிப்பு 2020 (''கொள்முதல் விதிமுறைகள்'') பிரிவு III பத்திகள் 3.14,3.16 மற்றும் 3.17 இற்கு ஈர்க்கப்படுகின்றது.

ஆலோசனை நிறுவனம் தங்கள் தகுதிகளை மேம்படுத்துவதற்காக ஏனைய நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளலாம் ஆனால் சங்கம் கூட்டுமுயற்சி மற்றும் / அல்லது துணை ஆலோசனை வடிவில் உள்ளதா என்பதை தெளிவாக குறிப்பிடல் வேண்டும். கூட்டுமுயற்சியெனின், பிரதான பங்குதாரர் தேர்ந்தெடுக்கப்பட்டால், முழு ஒப்பந்தத்திற்கும் தனித்தனியாக பொறுப்பேற்றல் வேண்டும்.

IPF கடன் வாங்குபவர்களுக்கான உலக வங்கியின் நான்காவது பதிப்பு 2020 இற்கான கொள்முதல் விதிமுறைகளில் விபரிக்கப்பட்டுள்ள நடைமுறைகளின் பிரகாரம் ஒரு ஆலோசனை நிறுவனம் தேர்ந்தெடுக்கப்படும் மற்றும் தேர்வு செய்யும் முறை தரம் மற்றும் ஆகு செலவு அடிப்படையிலான தேர்வாக இருக்கும்.

மேலதிக தகவலை கீழேயுள்ள முகவரியில் அலுவலக நேரங்களில், அதாவது மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் ஞாயிறு, திங்கள் மற்றும் பொது விடுமுறைகள் நீங்கலாக பெற்றுக் கொள்ளலாம்.

ஆர்வ வெளிப்பாட்டிற்கான வேண்டுகோளானது எழுத்து வடிவத்தில் 01 மூலப்பிரதி மற்றும் 07 நகல் பிரதிகளுடன் கீழேயுள்ள முகவரிக்கு (நேராக அல்லது தபாலில்) 2023 ஜுலை 20 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

**செயற்றிட்டப் பணிப்பாளர் -**
**காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சிநிரல் அணுகுமுறை**
**இல. 11, ஜாவத்த வீதி,**
**கொழும்பு-05, இலங்கை.**
**தொலைபேசி: +94 11-2058451/+94 11-2507855**
**தொலைநகல்: +94 11-2058451**
**மின்னஞ்சல்: pdcresmpa@gmail.com**

---

## இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு
## போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகார சபை (RDA)

### விலைக்கோரலுக்கான அழைப்பு

| ஒப்பந்தத்தின் பெயர் | | ஒப்பந்த இலக்கம் |
|---|---|---|
| அதிவேக வீதி செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவிற்கு வாகனங்களை வாடகைக்கமர்த்துதல் | வெளிச்சுற்று நெடுஞ்சாலைக்கு பராமரிப்பு வாகங்களை வாடகைக்கமர்த்துதல் | RDA/EOM&M/PRC/2023/MNT/06 |
| | கட்டுநாயக்க - கொழும்பு அதிவேக வீதிக்கு பராமரிப்பு வாகங்களை வாடகைக்கமர்த்துதல் | RDA/EOM&M/PRC/2023/MNT/07 |

மேற்கூறப்பட்ட ஒப்பந்தங்களுக்காக தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் இத்தால் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2023-06-27ஆம் திகதி முதல் 2023-07-20ஆம் திகதி வரையில் பெருந்தெருக்கள் அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் www.rda.gov.lk எனும் இணையதளத்தைப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

---

## பௌத்த மத அலுவல்கள் திணைக்களம்

### 1931 இல. 19 விஹாரா தேவாலகம் சட்டவாக்கத்தின் 8ஆம் பிரிவின் கீழ் பஸ்நாயக்க நிலமே ஒருவரை தேர்ந்தெடுத்துக் கொள்ளல்

பதுளை மாவட்டத்தில் பதுளை பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள பதுளை கதிர்காம கோவிலுக்கு பஸ்நாயக்க நிலமே பதவிக்கு ஒருவரை தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கான குறித்த கூட்டம் கீழ்க்காணுமாறு நடைபெறும்.

| தேவாலயத்தின் பெயர் | கூட்டம் நடத்தப்படும் திகதி மற்றும் நேரம் | கூட்டம் நடத்தப்படும் இடம் |
|---|---|---|
| பதுளை கதிர்காமம் கோவில் | 2023 ஜுலை 28 மு.ப. 10.00 இற்கு | பதுளை மாவட்ட செயலகம் அலுவலக இல. 02 கேட்போர்கூடம் |

02. குறித்த கோவிலின் பஸ்நாயக்க நிலமே பதவிக்கு விண்ணப்பிப்போர் குறித்த நேரத்திற்கு அக் கூட்டத்தின் சமுகமளித்தல் வேண்டும் அத்துடன் பௌத்த விஹார தேவாலகம் சட்டவாக்கத்தின் 14 மற்றும் 40ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்படுமாறு தகைமைகள் தமக்கு உள்ளமைக்கு சான்றாக சத்தியப் பிரமாண பத்திரத்தை சமர்ப்பிப்பதற்கு தயாராக இருத்தல் வேண்டும். குறிதத சத்தியப்பிரமாண பத்திரத்தின் மாதிரியை இவ் அலுவலகத்தில் அல்லது பௌத்த மத அலுவல்கள் பற்றிய கண்டி/ இரத்தினபுரி/ குருநாகல் பிரதேச அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

03. விண்ணப்பதாரர்களின் தகைமைகளை உறுதி செய்வதற்காக பௌத்த மத அலுவல்கள் ஆணையாளர் நாயகத்திற்கு வேறு சான்றுகள் தேவைப்படின் அவ்வாறு தேவைப்படும் சான்றுகளை சமர்ப்பிப்பதற்கு தயாராக இருத்தல் வேண்டும்.

04. பஸ்நாயக்க நிலமே பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படும் நபரால் மேற்படி பதவியின் வேலைகளை பொறுப்பேற்பதற்கு முன்னர் காசாக பிணையொன்றை வைத்தல் வேண்டும்.

**கே. பீ. சிரிபத்தன.**
**பௌத்த மத அலுவல்கள் ஆணையாளர் நாயகம் (பதில்),**
2023.06.23
**பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தில்**

---

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

### கொழும்பு துறைமுகத்தில் கிழக்கு கொள்கலன் முனையத்திற்காக செயற்பாட்டுக் கட்டிட நிர்மாணம் - மெருகூட்டல் மற்றும் நானாவித வேலைகள்

### (Contract No.: SLPA/CD/ECT/OPER/02)

1. **SLPA/CD/ECT/OPER/02** என்ற ஒப்பந்த இலக்கத்தின் கீழ் **''கொழும்பு துறைமுகத்தில் கிழக்கு கொள்கலன் முனையத்திற்காக செயற்பாட்டுக் கட்டிட நிர்மாணம் - மெருகூட்டல் மற்றும் நானாவித வேலைகளுக்காக''** தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து துறைமுகங்கள், கப்பற் சேவைகள் மற்றும் விமான சேவைகள் செயலாளரின் சார்பாக, துறைமுகங்கள், கப்பற் சேவைகள் மற்றும் விமான சேவைகள் அமைச்சின், அமைச்சு பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். இந்த ஒப்பந்தத்தின் கீழான வேலையானது பிரதானமாக நான்கு மாடி கட்டிடமொன்றில் மெருகூட்டல் மற்றும் நானாவித வேலைகளை அடக்குகின்றது. மொத்த தரை பரப்பானது அண்ணளவாக 4500 சதுர அடியாகும்.
2. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதிக்காக பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - விலைமனுதாரர் வீதி நிர்மாணத்தில் விஷேடத்துவம் பெற்ற சி-3 அல்லது சி-2 தரப் பதிவு ஒப்பந்தக்காரர்களாக **CIDA (ICTAD** என முன்பு அழைக்கப்பட்டது) பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் 8 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள செல்லுபடியாகும் தன்மையிலுள்ள eroc.drc.gov.lk என்ற இணையதள ஒன்லைனில் விண்ணப்பிக்கும் விலைமனுதாரரினால் பெற்றுக் கொண்ட சான்றிதழ்.
3. கொழும்பு-01, லெய்டன் பஸ்தியன் வீதி, 45 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, தொழில்நுட்ப நூலகத்தில் 2023.07.05 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமும் அதனைத் தொடர்ந்து தளவிஜயமும் நடைபெறும்.
4. 2023.06.26 ஆம் திகதியிலிருந்து 2023.07.17 ஆம் திகதி வரையும் (இரு நாட்களும் அடங்கலாக) வேலை நாட்களில் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 2 மணிக்குமிடையில் ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்புக்கள், ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்புக்கள் பிரிவு, இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, இல.: 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01 இலுள்ள பிரதான பொறியியலாளரினால் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமான 35,000 ரூபாவை (பெசேவ அடங்கலானது) செலுத்திய பின்னர், எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் விலைமனுக்கோரல் ஆவணங்கள் வழங்கப்படும். அதே அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
5. விலைமனுக்கள் 119 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கோரல் ஆவணங்கள் பாதுகாப்புள்ள முத்திரையிடப்பட்ட தபாலுறையொன்றில் அடக்கப்பட்டு அதனது இடது பக்க மேல் மூலையில் "**Construction of Operation Building for East Container Terminal in the Port of Colombo – Finishes and Miscellaneous Works (Contract No.: SLPA/CD/ECT/OPER/02)"** என அடையாளமிடப்பட்டு பதிவுத் தபாலில் தலைவர்- அமைச்சு பெறுகைக் குழு, துறைமுகங்கள், கப்பற் சேவைகள் மற்றும் விமான சேவைகள் அமைச்சு, இல. 19, சைத்திய வீதி, கொழும்பு-01 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது மேலேயுள்ள முகவரியிலுள்ள துறைமுகங்கள், கப்பற் சேவைகள் மற்றும் விமான சேவைகள் அமைச்சு அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.
7. அனைத்து விலைமனுக்களும் 2,300,000 ரூபா பெறுமதியான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது 2023.12.12 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய நேர சட்டகமானது 180 நாட்களாகும்.
9. விலைமனுக்கள் இரு பிரதிகளில் 2023.07.18 ஆம் திகதியன்று பி.ப. 2 மணியளவில் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன் விலைமனுக்கள் அவைகளை மூடியவுடன் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
10. மேலதிக எந்தவொரு விபரங்களையும் 011-2380517 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக மேலேயுள்ள முகவரியிலுள்ள ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்புக்கள் பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

மேலேயுள்ள அனைத்து விடயங்களும் eroc.drc.gov.lk என்ற இணையதளத்திலிருந்து ஒன்லைனில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

**தலைவர் - அமைச்சு பெறுகைக் குழு,**
**துறைமுகங்கள், கப்பற் சேவைகள் மற்றும் விமான சேவைகள் அமைச்சு,**
**இல.: 19, சைத்திய வீதி, கொழும்பு-01.**

---


# சிறு விளம்பரம்

**மோட்டார் வாகனங்கள்**

**106 கார்கள் விற்பனைக்கு**

HI-9844 PEROUDA KANCIL 1998, CAR அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071 4 5 4 295 8. 038735

18-5844 DAIHATSU 1990, CAR அதி யுயர் விலைக்கு. வெ லி பல் பினான்ஸ் பி எல்சி, இல. 310, கா லி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 07 1121081 0. 038754

**107 டொயோட்டா கார்கள் விற்பனைக்கு**

KV-4365 TOYOTA PRIUS 2011, CAR அதியுயர் வி லைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071454295 8. 038752

**119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு**

226-2681 ISUZU 1996, LORRY அதி யுயர் விலைக்கு. வெலி பல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, கா லி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 07 1454295 8. 038747

**122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

ABJ-5492 BAJAJ 2015, AAV-0332 BAJAJ 2014, THREE-WHEEL அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0705 9 9 916 3. 038739

YK-8548 BAJAJ 2011, YW-7277 BAJAJ 2012 THREE WHEEL அதி யு யர் விலைக்கு. வெ லி பல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, கா லி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 07 1121081 0. 038743

**வேலைவாய்ப்பு**

**320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்**

மாத்தறை விறகு அடுப்பு பேக்கரிக்கு எல்லா வேலைகளும் தெரிந்த (இனிப்பு பலகாரம்) பணியாட்கள் தேவை. உணவு தங்குமிட வசதி கள் இலவசம். தொடர்பு 0713311501. 038365

**Repeat Your Ad For Better Offers**


---

### 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்த) சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (460 ஆவது அத்தியாயம்) 7 (1) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

முன்னளிப்பு : KDS/YNU/4/1/LD/D/716 (11)

கீழே குறிப்பிடப்பட்டு உள்ள விபரங்களைக் கொண்ட காணியினை பகிரங்க நடவடிக்கை ஒன்றிற்காக அரசிற்கு எடுத்துக் கொள்வதற்கு எண்ணியிருக்கிறார்கள். மேலதிக விபரங்களுக்காக 2331/68 ஆம் இலக்க மற்றும் 2023.05.13 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகையினைப் பார்க்கவும்.

**அட்டவணை**

01. மாவட்டம் : கண்டி
02. பிரதேச செயலாளர் பிரிவு : யட்டிநுவர
03. ஊர் : பிலிமதலாவ
04. கிராம அலுவலர் பிரிவு : அரம்பேகம மேற்கு
05. காணியின் பெயர் : இம்புல் ஹிட்டியவத்த, இம்புல்ஹிட்டிய, துன்கும்புர, துன்பேல, குல்லேலியத்த, பொல்பிதிகொட கும்புர, துன்பேலே வத்த
06. திட்ட வரைபட இலக்கம் மற்றும் காணித்துண்டு இலக்கம் : மு.பி.மஹ 7100 இன் காணித்துண்டு, இலக்கம் 01, 02, 03, 04, 05, 06, 07, 08, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 24
07. அளவு : 1.0813 ஹெக்டயர்கள்

**அனுபம மங்கல விக்ரமாரச்சி,**
**பிரதேச செயலாளர் மற்றும் காணி எடுத்தல் உத்தியோகத்தர்,**
**யட்டிநுவர**



# சிட்டி லீக் தலைவர் கிண்ணம்: மொரகஸ்முல்ல முதல் வெற்றி



சிட்டி லீக் தலைவர் கிண்ண கால்பந்து தொடரில் மொரகஸ்முல்ல விளையாட்டுக் கழகம் மற்றும் மாளிகாவத்தை யூத் அணிகளுக்கு இடையில் இடம்பெற்ற போட்டியில் மொரகஸ்முல்ல அணி 2–0 என்ற கோல்களால் வெற்றியீட்டியது. இதன்படி இந்தத் தொடரில் இதுவரை நடைபெற்ற நான்கு போட்டிகளில் வெற்றியீட்டிய ஒரே அணியாக மொரகஸ்முல்ல கழகம் தற்போது முன்னிலையில் உள்ளது.

கொழும்பு சிட்டி லீக் மைதானத்தில் கொழும்பு கால்பந்து அணி மற்றும் சோன்டர்ஸ் அணிகளுக்கு இடையில் நேற்று முன்தினம் (25) நடைபெற்ற போட்டி கோலின்றி சமநிலை பெற்றது. முதல் வாரத்தில் இடம்பெற்ற இரு போட்டிகளும் வெற்றி தோல்வியின் முடிவுற்றதால் சோன்டர்ஸ், ஜாவாலேன் மற்றும் கொழும்பு கால்பந்து கழகங்கள் சம புள்ளிகளை பெற்றுள்ளன.

மொரகஸ்புல்ல – மாளிகாவத்தை யூத் அணிகளுக்கு இடையில் நடைபெற்ற போட்டியின் முதல் பாதியில் கோல் பெறப்படாத நிலையில் 55 ஆவது நிமிடத்தில் திசர டி சில்வா மற்றும் 90 ஆவது நிமிடத்தில் டிலான் மதுசங்க கோல் பெற்றனர்.

சிட்டி லீக் தலைவர் கிண்ண கால்பந்து தொடரில் வெற்றியீட்டும் அணிக்கு ரூபா 150,000 மற்றும் இரண்டாம் இடத்தைப் பிடிக்கும் அணிக்கு ரூபா 100,000 பரிசு வழங்கப்படுவதோடு, அந்த கால்பந்து லீக்கின் தலைவர் ஆர். புவனேந்திரனின் தனிப்பட்ட பணத்தில் அனுசரணை வழங்கப்படுவது சிறப்பம்சமாகும்.

இதேவேளை இந்த போட்டிகளை இலவசமாக பார்க்கும் வாய்ப்பு முன்னாள் கால்பந்து வீரர்களுக்கு வழங்குவதற்கு போட்டி ஏற்பட்டாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

அதற்காக இலங்கை கால்பந்து சம்மேளனத்தினால் வழங்கப்பட்ட விளையாட்டு அடையாள அட்டை அரங்குக்குள் நுழைவதற்கு அவசியம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# அல்–இஸ்ஸத் கிண்ணம் ரொக் சலஞ்சர்ஸ் வசம்

பாலமுனை விசேட நிருபர்



பொத்துவில் அல்–இஸ்ஸத் விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்ட அல்–இஸ்ஸத் சம்பியன் கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் பொத்துவில் ரொக் சலஞ்சர்ஸ் அணி கிண்ணத்தை சுவீகரித்தது.

களப்புக்கட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமை (24) நடைபெற்ற இறுதிப் போட்டியில் பவர்போய்ஸ் அணியை எதிர்கொண்ட ரொக் சலஞ்சர்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடி 8 ஓவர்களுக்கும் 2 விக்கெட்டுகளை இழந்து 117 ஓட்டங்களை பெற்ற நிலையில் எதிரணியை 54 ஓட்டங்களுக்கு மட்டுப்படுத்தியது.

# சம்பியனானது இளந்தாரகை

ஏறாவூர் சுழற்சி நிருபர்



மட்டக்களப்பு பாடுமீன் கழகத்தினால் நடாத்தப்பட்ட பத்மநாபா ஞாபகார்த்த சவால் கிண்ண உதைப்பந்தாட்ட தொடரில் ஏறாவூர் இளந்தாரகை விளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தை வென்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் 32 அணிகள் பங்கேற்ற இந்த தொடரில் இறுதிப் போட்டியில் காஞ்சிரங்குடா ஜெகன் விளையாட்டுக் கழகத்தை 1–0 என்ற கோல் கணக்கில் ஏறாவூர் இளந்தாரகை அணி வீழ்த்தியது. மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிறன்று (25) நடைபெற்ற இறுதிப் போட்டியில் எஸ். ஜே.சாஜித் அலி வெற்றி கோலை புகுத்தினார்.

# சுப்பர் சிக்ஸ் புள்ளிகளுக்காக இலங்கை இன்று ஸ்கொட்லாந்துடன் பலப்பரீட்சை

உலகக் கிண்ண தகுதிகாண் தொடரின் சுப்பர் சிக்ஸ் சுற்றுக்கு முன்னேற்றம் கண்டிருக்கும் இலங்கை அணி குழுநிலையில் தீர்க்கமான தனது கடைசி போட்டியில் இன்று (27) ஸ்கொட்லாந்து அணியை எதிர்கொள்ளவுள்ளது.

பி குழுவில் தோல்வியுறாத அணிகளாக இருக்கும் இந்த இரு அணிகளும் சுப்பர் சிக்ஸ் சுற்றில் தனது புள்ளிகளை அதிகரித்துக் கொள்ளவே இன்றைய தினம் களமிறங்கவுள்ளது. இந்தப் போட்டி இலங்கை நேரப்படி இன்று நண்பகல் 12.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

உலகக் கிண்ண தகுதிகாண் சுற்றில் தற்போது சுப்பர் சிக்ஸ் சுற்றுக்கான ஆறு அணிகளும் தகுதி பெற்றுள்ளன. இதில் ஏ குழுவில் சிம்பாப்வே, நெதர்லாந்து மற்றும் மேற்கிந்திய தீவுகள் அடுத்த சுற்றுக்கு முன்னேறி இருப்பதோடு பி குழுவில் இலங்கையுடன் ஸ்கொட்லாந்து மற்றும் ஓமான் அணிகள் முன்னேற்றம் கண்டுள்ளன.

எனினும் குழு நிலையில் சுப்பர் சிக்ஸ் சுற்றுக்கு முன்னேறும் அணியுடன் பெறும் வெற்றி அடுத்த சுற்றுக்கு சேர்க்கப்படும் நிலையில் இன்றைய போட்டியில் இலங்கை அணி வெற்றி பெறுவது கட்டாயமாக உள்ளது.

ஏற்கனவே ஓமானுக்கு எதிராக பெற்ற வெற்றியின் மூலம் சுப்பர் சிக்ஸ் சுற்றில் 2 புள்ளிகளை பெற்றிருக்கும் இலங்கை அணி ஸ்கொட்லாந்தை வீழ்த்தினால் அந்தப் புள்ளியை 4 ஆக அதிகரிக்க முடியும்.

இலங்கை அணி கடந்த மூன்று போட்டிகளிலும் எந்த நெருக்கடியும் இன்றி இலகு வெற்றியை பதிவு செய்துள்ளது. துடுப்பாட்டத்தில் திமுத் கருணாரத்ன ஆரம்பத்தில் விக்கெட்டை காத்து ஓட்டங்களை அதிகரிக்கும் அதே நேரம் மத்திய வரிசையில் குசல் மெண்டிஸ், சரித் அசலங்க, சதீர சமரவிக்ரம மற்றும் தனஞ்சய டி சில்வா சிறப்பாக ஆடி வருகின்றனர்.

பந்துவீச்சில் வனிந்து ஹசரங்க கடந்த மூன்று போட்டிகளிலும் மொத்தம் 16 விக்கெட்டுகளை வீழ்த்தி எதிரணிக்கு தொடர்ந்து நெருக்கடி கொடுத்து வருகிறார். இதன்போது அவர் கடந்த மூன்று போட்டிகளிலும் ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்தி பாகிஸ்தான் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் வாக்கார் யூனிசின் 33 ஆண்டு சாதனையை சமப்படுத்தி உள்ளார்.

இந்நிலையில் இன்றைய போட்டியிலும் அவர் ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்தினால் அந்த சாதனையை முறியடிக்க முடியுமாக இருக்கும்.

துஷ்மன்த சமீர தொடர்ந்து உபாதையால் அவதிப்பட்டு வரும் நிலையில் இன்றைய தினமும் அவர் களமிறங்குவதில் சந்தேகம் நிலவுகிறது. எனினும் வேகப்பந்து வீச்சாளர்களான லஹிரு குமார மற்றும் கசுன் ராஜித்த சிறப்பாக செயற்பட்டு வரும் நிலையில் இன்றைய போட்டிக்கான அணியில் மாற்றங்கள் நிகழாது என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்றுடன் உலகக் கிண்ண தகுதிகாண் சுற்று குழுநிலை போட்டிகள் நிறைவடையவுள்ள நிலையில் வரும் வியாழக்கிழமை சுப்பர் சிக்ஸ் சுற்று போட்டிகள் ஆரம்பமாகவுள்ளது.




# ரஷ்ய வான் தாக்குதலில் சிரியாவில் 13 பேர் பலி



வட மேற்கு சிரியாவில் கிளர்ச்சியாளர் கட்டுப்பாட்டு பகுதி மீது ரஷ்யா நடத்திய வான் தாக்குதல்களில் 13 பேர் கொல்லப்பட்டிருப்பதாக போர் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இத்லிப் பிராந்தியத்தில் உள்ள மரக்கறி சந்தையில் இடம்பெற்ற தாக்குதலிலேயே அதிகம் பேர் கொல்லப்பட்டுள்ளனர். இதில் ஒன்பது சிறுவர்கள் உட்பட ஒன்பது பொதுமக்கள் பலியாகியுள்ளனர்.

சிரியாவில் ரஷ்யா இந்த ஆண்டில் நடத்திய அதிக உயிரிழப்புகள் கொண்ட தாக்குதல் இதுவென்று பிரிட்டனை தளமாகக் கொண்ட மனித உரிமைகளுக்கான சிரிய கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

சிரிய ஜனாதிபதி பஷர் அல் அஸாத் அரசுக்கு ஆதரவாகச் செயற்படும் ரஷ்ய படை கடந்த வாரம் கிளர்ச்சியாளர்களின் ஆளில்லா விமானத் தாக்குதலுக்கு பதில் நடவடிக்கையாக நடத்திய தாக்குதல் ஒன்றில் இரு சிறுவர்கள் உட்பட நான்கு பொதுமக்கள் கொல்லப்பட்டதாக கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆயுதம் ஏந்திய கிளர்ச்சியாளர்களை குறி வைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக சிரிய அரசு தெரிவித்துள்ளது. ஆனால் இது குறித்து ரஷ்யா எந்த கருத்தையும் கூறவில்லை. படுகாயம் அடைந்தவர்களில் பலர் கவலைக்கிடமாக உள்ளது. இதனால் பலி எண்ணிக்கை உயரும் என அஞ்சப்படுகிறது. இந்த ஆண்டு சிரியாவில் நடந்த மோசமான சம்பவம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச செய்திகள்

வாக்னர் கிளர்ச்சி தணிந்த பின்

# ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் செர்கெய் முதல்முறை போதுவெளியில் தோற்றம்



ரஷ்யாவில் வாக்னர் கூலிப்படை தலைவர் யெவ்கனி பிரிகொசின் தனது கிளர்ச்சியை கைவிட்டதைத் தொடர்ந்து அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் செர்கெய் சொய்கு முதல் முறை பொதுவெளியில் தோன்றியுள்ளார்.

உக்ரைனில் ரஷ்ய இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ரஷ்ய துருப்புகளை செர்கெய் சந்திக்கும் சிறிய வீடியோ பதிவு ஒன்று நேற்று (26) வெளியானது.

எனினும் வாக்னர் படையினர் மொஸ்கோவை நோக்கிய தனது பயணத்தில் இருந்து வாபஸ் பெற்றது தொடக்கம் அந்தத் தனியார் படையின் தலைவர் பிரிகொசின் மற்றும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டி இன்னும் பொது வெளியில் தோன்றவில்லை.

வாக்னர் படையினரின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டதை அடுத்து அவர்கள் தமது முகாம்களுக்கு திரும்பியதோடு, பிரிகொசின் அண்டை நாடான பெலாரஸுக்கு செல்ல இணங்கினார்.

ஆயுத கிளர்ச்சியை அடுத்து அறிவிக்கப்பட்ட பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையை மொஸ்கோ மேயர் நேற்று (26) ரத்துச் செய்தார்.

உக்ரைன் போர் விவகாரம் குறித்து பாதுகாப்பு அமைச்சர் செர்கெய்வுக்கு வாக்னர் தலைவருக்கும் இடையிலான முறுகலை அடுத்தே அந்தக் கூலிப்படை கிளர்ச்சியை ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது. உக்ரைனின் உண்மையான நிலை குறித்து செர்கெய் ஜனாதிபதியிடம் பொய் கூறுகிறார் என்று பிரிகொசின் குற்றம்சாட்டியிருந்தார்.

ஜனாதிபதிக்கு மிக நெருக்கமானவராகக் கருதப்படும் செர்கெய் முன்னர் புட்டினுடன் சைபீரியாவில் மீன்பிடிப்பது மற்றும் வேட்டைகளில் ஈடுபட்டு வந்தவராவார். புட்டினுக்கு அடுத்தவர் என்றும் அவர் கருதப்பட்டு வந்தார்.

# பனாமா கால்வாயில் வறட்சி: கப்பல்கள் செல்வதில் சிக்கல்



பனாமா கால்வாயில் 70 ஆண்டு காணாத கடுமையான வறட்சி ஏற்பட்டுள்ளது. தண்ணீர் அளவு குறைந்து வருவதால் அதில் செல்லும் சரக்குக் கப்பல்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது. பாதுகாப்பை உறுதிசெய்ய அவற்றின் எடையைக் குறைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நெருக்கடியால் உலக அளவில் மூலப் பொருட்களின் விலை அதிகரிக்கலாம் எனும் அச்சம் எழுந்துள்ளது.

சரக்குப் போக்குவரத்துக்காக பனாமா கால்வாயை நம்பியிருக்கும் பல நிறுவனங்கள் ஒவ்வொரு கொள்கலனுக்கும் போக்குவரத்துக் கட்டணத்தை 300 டொலரில் இருந்து 500 டொலருக்கு உயர்த்தியுள்ளன. தளவாடச் செலவு அதிகரித்திருப்பதால் மூலப் பொருள்களின் விலையும் கூடும் எனப் பொருளாதார வல்லுநர்கள் கூறுகின்றனர்.

80 கிலோமீற்றர் நீளம் கொண்டது பனாமா கால்வாய். பல நாடுகள் பனாமா கால்வாய்க்குப் பதிலாகச் சரக்குப் போக்குவரத்துக்கு மற்ற பாதைகளைப் பயன்படுத்த முனைகின்றன.

# தொடரும் படுகொலைகள்: ஹொன்டுராஸில் பதற்றம்



ஹொன்டுராஸ் நகர் ஒன்றில் 13 பேர் சுட்டுக் கொல்லபட்டதைஅடுத்து அந்நாட்டு ஜனாதிபதி சியொமோரா காஸ்ட்ரோ அந்த நகரில் அவசர ஊரடங்குச் சட்டத்தை பிறப்பித்துள்ளார்.

சொலோமா நகரில் பிறந்த நாள் கொண்டாட்டம் ஒன்றிலேயே 12 ஆண்கள் மற்றும் ஒரு பெண் கொல்லப்பட்டுள்ளனர். வடக்கு சுலா பள்ளத்தாக்கு பிராந்தியத்தில் இடம்பெற்ற மற்ற கொலைச் சம்பவங்களையும் சேர்த்து கொல்லப்பட்டவர்கள் எண்ணிக்கை 20 ஆக அதிகரித்துள்ளது.

போதைக் கடத்தல் கும்பல்களுடன் தொடர்புபட்டே இந்தக் கொலை சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்தே கடந்த சனிக்கிழமை (24) பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு 15 நாட்களுக்கு நீடிக்கிறது. சுற்றிவளைப்புகள், சோதனைகள் என பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருப்பதாக அந்நாட்டு ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

# இந்திய விமானப் படைக்கு என்ஜின் தயாரிக்க ஒப்பந்தம்



இந்திய விமானப் படைக்கான யுத்த விமான என்ஜின்களை இந்திய அரச நிறுவனத்துடன் கூட்டாகத் தயாரிப்பது குறித்து அந்நாட்டு பிரதமர் நரேந்திர மோடி, அமெரிக்காவின் ஜெனரல் இலக்ட்ரிக் நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரியும் தலைவருமான லோரன்ஸ் கல்ப்பை வெள்ளை மாளிகையில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

மோடி அமெரிக்காவுக்கு மேற்கொண்டிருந்த உத்தியோகபூர்வ விஜயத்தின் போது இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது. அதனைத் தொடர்ந்தே ஜெனரல் இலக்ட்ரிக் நிறுவனம், இந்திய விமானப் படைக்கான யுத்த விமான என்ஜின்களை இந்தியாவின் ஹிந்துஸ்தான் ஏரொநொட்டிக்ஸ் நிறுவனத்துடன் கூட்டாகத் தயாரிப்பதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் என்று அறிவித்துள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜுன் மாதம் 27ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.